Registered as a Newspaper.

A/L 89
பொருளியல் பிரிவு; III
திரு. உதயன்
Sat - Sun
5-15 p.m. - 6-00 a.m.
Friday - 3 00 p.m.
தமிழ்: திரு. தாஸ்
Sat - Sun: 8-00 a.m.
ECALOM
Tuition Center
JAFFNA.

# உதயன்

உண்மை – அஞ்சாமை – நடு நிலைமை

விலை ரூ.2-00

A L 89 புதிய பிரிவுகள்
இந்துநாகரிகம்
திருமதி அருள்நங்கை
Sat. — Sun. 7-00 a.m.
கணக்கியல்
திரு. சௌந்தி
Sat — Sun 7-00 a.m.
ECALOM
Tuition Center
JAFFNA.

சுடர்: 3 யாழ்ப்பாணம் விபவ ஆண்டு வைகாசி மீ 32 உ. செவ்வாய்க்கிழமை ஹிஜ்ரி 1408 ஷவ்வால் பிறை 28 (14 - 06 - 1988) UTHAYAN A LIVELY TAMIL DAILY கதிர்: 105

# மக்கள் விருப்பத்தை வெளிப்படுத்தவே நாளை வெள்ளைக் கொடி தினம்

## கல்கத்திற்கு எழுதிய கடிதத்தில் ஆணையாளர் சிவஞானம் கருத்து

— அலுவலகப் பிரதிநிதி ந. வித்தியாதரன் —

யாழ்ப்பாணம், ஜூன் 14

நாளை புதன்கிழமை வடக்கு, கிழக்குப் பகுதிகளில் நடைபெற இருக்கும் வெள்ளைக் கொடித்தினப் போராட்டம் –

உடனடி யுத்தநிறுத்தம், பேச்சுவார்த்தை ஆகியவற்றை தமிழ் பேசும் மக்களும் ஏகோபித்து ஆதரிக்கிறார்கள் என்பதை உறுதிப் படுத்தும் போராட்டமே.

மக்களின் ஏகோபித்த விருப்பத்தை வெளிப்படுத்தவே வெள்ளைக் கொடித்தினம் ஏற்பாடு செய்யப்பட்டுளளது.

இவ்வாறு பிரஸ்தாப போராட்டத்தை ஏற்பாடு செய்துள்ள யாழ். மாநகர ஆணையாளர் திரு. சீ வி. கே சிவஞானம், இந்திய அமைதிப்படையின் தளபதி லெப்டினன்ட் ஜெனரல் ஏ. எஸ். கல்கத்துக்கு அனுப்பிவைத்த கடிதம் ஒன்றில் விளக்கியுள்ளார்.

வெள்ளைக் கொடித்தினம் ஹர்த்தால் அல்ல; கடையடைப்பும் அல்ல என்றும் திரு, சிவஞானம் தமது கடிதத்தில் தெளிவுபடுத்தியுள்ளார்.

9-6-88 திகதியிடப்பட்ட அக்கடிதம், பலாலித் தலைமைக் காரியாலயத் தளபதி மேஜர் ஜெனரல் சர்தேஷ் பாண்டே, யாழ்நகர தளபதி பிரிகேடியர் காலோன் ஆகியோரூடாக அனுப்பி வைக்கப்பட்டது.

கடிதவிவரம் வருமாறு;

அன்புள்ள ஐயா,

சென்ற ஏப்ரல் 12ஆம் திகதியும் மே 19ஆம் திகதியும் உங்களுடன் நடத்திய பேச்சுக்கள் தொடர்பாக எழுதிக் கொள்வது

தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்துடன் நேரடிப் பேச்சுக்களை ஆரம்பிப்பதில் காட்டப்படும் நீடித்த தாமதம் குறித்து எனது வருத்தத்தைத் தெரிவிக்க வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளேன்.

19ஆம் திகதி நான் உங்களுக்கு விளக்கியபடி, நான் அப்போது தெரிவித்த அபிப்பிராயங்கள் தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்கத்தினுடையதும், தமிழ்பேசுமமக்களுடையதும் ஆகும். அதனை வெளிப்படுத்தும் எழுத்து மூலமான உறுதியை தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தின் பிரதித்தளபதியிடம் இருந்து பெற்றிருக்கின்றேன்.

★ இந்திய அரசு காலவரையறையற்ற, நிபந்தனையற்ற யுத்த நிறுத்தத்தை அறிவிக்க வேண்டும்.

★ பிரச்சினைக்கு உரிய விஷயங்கள் குறித்து தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்துடன் உடன்பேச்சுவார்த்தைகளை இந்தியா ஆரம்பிக்கவேண்டும்.

இந்திய அரசுக்கு நான் விடுத்துள்ள மேற்கூறப்பட்ட கோரிக்கைகளுக்கு தமிழ்பேசும் மக்கள் ஆதரவு தருகிறார்கள் என்பதை நான் உறு

[6 ஆம் பக்கம் பார்க்க]

### முச்சந்தி முரளி



மாகாண சபையும் வந்துதோ வந்திது.பலருக்கு பதவியளும் வந்திட்டுது. ஆளுநர், முதலமைச்சர், மந்திரிமார் எண்டு எக்கச்சக்கமான பதவியள்...... ...!

## இம்மாதச் சம்பளத்துடன்

# யாழ். மாவட்ட ஆசிரியர்களுக்கு வாழ்க்கை செலவுப்படி

அச்சுவேலி, ஜூன் 14

ஜனவரிமாதம் தொடக்கம் வாழ்க்கைச் செலவுப்படி பெற்றுக்கொள்ளாத யாழ். மாவட்ட ஆசிரியர்களுக்கு இந்த மாதச் சம்பளத்துடன் வாழ்க்கைச் செலவுப்படி [பாக்கி உட்பட] வழங்கப்படவுள்ளது

கடந்த வரவு செலவுத் திட்டத்தின் அடிப்படையில் 2 ஆயிரம் ரூபா ஆரம்பச்சம்பளம் பெறும் அரசாங்க ஊழியர்களுக்கு வாழ்க்கைச்செலவுப் படி வழங்கப்படவில்லை.

அரசாங்கத்தின் தீர்மானத்தின்படி பட்டதாரி ஆசிரியர்கள் உட்பட அதற்கு மேற்பட்ட தரத்தில் உள்ள ஆசிரியர்கள், அதிபர்களுக்கு வாழ்க்கைச் செலவுப்படி கிடைக்கவில்லை.

பொதுவாக பயிற்றப்பட்ட ஆசிரியர்களுக்கும் அதற்குக் குறைவானவர்களுக்குமே வாழ்க்கைச் செலவுப்படி வழங்கப் பட்டு வந்தது.

அரசாங்கத்தின் புதிய தீர்மானத்தின்படி ஆரம்பச் சம்பளம் மாத 2,975 ரூபாவும் அதற்குமேலும் வருடாந்த சம்பள உயர்ச்சி 1,200 ரூபாவும் [மாதம் 100 ரூபாவும்] பெறுபவர்கள் தவிர அதற்குக் குறைவான சம்பளம் பெறுபவர்களுக்கு வாழ்க்கைச் செலவுப்படி வழங்கப்பட உள்ளது. (ஒ-11)

# பருத்தித்துறையில் பகிஷ்கரிப்பு நடத்த மாணவர் ஏற்பாடு

யாழ்ப்பாணம், ஜூன் 14

பருத்தித்துறைப் பகுதியில் இன்று செவ்வாய்க் கிழமை பகிஷ்கரிப்பு நடவடிக்கை ஒன்றை நடத்த வடமராட்சி மாணவர் ஒருங்கிணைப்புக் குழு ஏற்பாடு செய்துள்ளது.

பருத்தித்துறைப் பகுதியில் உள்ள பாடசாலை மாணவர்கள், உத்தியோகத்தர்கள் ஆகியோரிடமும், தனியார் ஸ்தாபனங்கள், போக்குவரத்து நிறுவனங்கள் ஆகியவற்றிடமும் இந்தப் பகிஷ்கரிப்புக்கு ஆதரவு தருமாறு கேட்கப்பட்டுள்ளது.

இது சம்பந்தமாக வடமராட்சி மாணவர் ஒருங்கிணைப்புக் குழு அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளது.

இம்மாதம் முதலாம் திகதி பருத்தித்துறையில் நடந்த துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தைத் தொடர்ந்து. அப்பகுதியில் அமைதிப் படையினர் நடந்துகொண்ட விதங்களை ஆட்சேபித்தும், மேற்கொண்ட நடவடிக்கைகளை ஆட்சேபித்தும், பொதுமக்களுக்கு ஏற்பட்ட அசௌகரியங்களை எடுத்துச் சொல்லவுமே இன்று பகிஷ்கரிப்பு நடவடிக்கை மேற்கொள்ளப்பட இருப்பதாக அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. (அ)

# விஸ்வமடுவில் நேற்று சூட்டுச்சம்பவம்

புதுக்குடியிருப்பு, ஜூன் 14

விஸ்வமடுவில் தேடுதல் நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த அமைதிப் படையினர் மீது துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளப்பட்டது.

அப்போது ஜவான் ஒருவர் துப்பாக்கிச் சூட்டிற்கு இலக்கானார்

இச் சம்பவம் நேற்று திங்கட்கிழமை நடைபெற்றது.

சம்பவம் பற்றிக் கூறப்படுவதாவது:-

வீடு ஒன்றை இந்திய அமைதிப் படையினர் சுற்றி வளைத்தபோது மறைந்திருந்தவர்களினால் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளப்பட்டது

அப்போது அமைதிப் படை ஜவான் ஒருவர் காயத்திற்குள்ளானார்.

இச் சம்பவத்தைத் தொடர்ந்து பிரயாணிகள் மீதான சோதனை தீவிரப்படுத்தப்பட்டதுடன் பலமணி நேரம் வெயிலிலும் தடுத்து வைக்கப்பட்டனர். (ஒ)

### சுபநேரம்

14—6—1988
வைகாசி 32
செவ்வாய்க்கிழமை
சுபநேரம்:
10 23 முதல்11.53 வரை
ராகுகாலம்:
2 53 முதல் 4 23வரை
இவை பகலுக்கும் இரவுக்கும் பொருந்தும்
அமாவாசை விரதம்

# தி.மு.க-முஸ்லிம் லீக் தேர்தல் உடன்பாடு தொடரும்

சென்னை, ஜூன் 14

திராவிட முன்னேற்றக் கழகத்துடன் ஏற்கனவே செய்து கொண்ட தேர்தல் உடன்பாடு எதிர் வரும் தமிழ்நாடு சட்டசபைத் தேர்தலிலும் நீடிக்கும் என்று இந்திய முஸ்லிம் லீக் அறிவித்திருக்கின்றது.

லீகின் செயலாளர் ஜனுப் சுலைமான் நேற்று தி.மு க தலைவர் கலைஞர் கருணாநிதியைச் சந்தித்தார். அதன் பின்னரே அவர் இந்த அறிவிப்பை விடுத்தார்.

முன்னைய தேர்தல் உடன்பாட்டை மீளாய்வு செய்யவேண்டிய அவசியம் ஏற்படவில்லை என்றும் ஜனுப். சுலைமான் தெரிவித்தார். (ஓ-எ)

# கான்ஸ்டபிள் சுட்டுக்கொலை

கொழும்பு, ஜூன் 14

ஹாலிஎல பட்டின சபை அலுவலகத்தைக் காவல் புரிந்து வந்த மூன்று பொலீஸ் கான்ஸ்டபிள்களில்ஒருவர் இனந் தெரியாத கோஷ்டி ஒன்றின் துப்பாக்கிப் பிரயோகத்தின் போது உயிரிழந்தார்.

இச் சம்பவம் நேற்று முன் தினம் இடம்பெற்றது. (ஓ-எ)

# கறுப்புப்பட்டி இயக்கம் முல்லைத்தீவில் ஆரம்பம்

முல்லைத்தீவு, ஜூன் 14

முல்லைத்தீவு மாவட்ட பிரசைகள் குழுவினால் ஏற்பாடு செய்யப்பட்ட கறுப்புப்பட்டி இயக்கம் நேற்று ஆரம்பமானது

மக்கள் பலரும் இதில் ஆர்வத்துடன் கலந்து கொண்டனர் கறுப்புப் பட்டி அணியும் இந்த இயக்கம் இன்றும் நாளையும் தொடரும் நாளை ஊர்வலங்கள் நடத்தி முல்லைத்தீவு நகர மைதானத்தில்பொதுக் கூட்டம் நடத்தவும் ஏற்பாடாகி உள்ளது

வெலிஓயா சிங்களக் குடியேற்றத்தை நிறுத்தவும். அகற்றவும் வேண்டும் என்பதே கறுப்புப்பட்டி இயக்கத்தின் பிரதான கோரிக்கையாகும்.

✶ யுத்த நிறுத்தத்தை உடனடியாக அமுல் செய்யவும்

✶ இந்தியத் தரப்பும் தமிழீழ விடுதலைப்புலிகள் தரப்பும் உடனடியாகப் பேச்சுவார்த்தையை ஆரம்பிக்கவும்

✶ சிறைகளில் வாடும் இளைஞர்களை உடன் விடுதலை செய்யவும்.

என்பன ஏனைய கோரிக்கைகளாகும்

முதலாவது கறுப்புப் பட்டியை முல்லை மாவட்டப் பிரசைகள் குழுத் தலைவர் திரு பொன் சந்திரசேகரி விநியோகித்துப் போராட்டத்தை ஆரம்பித்து வைத்தார் (அ-92)

# விதை உருளைக் கிழங்கு இறக்குமதி நிறுத்தப்படும்

## அமைச்சர் பண்டார தகவல்

கொழும்பு, ஜூன் 14

எதிர்காலத்தில் விதை உருளைக்கிழங்கு இறக்குமதி நிறுத்தப்படும் என்று அறிவிக்கப்படுகிறது.

இதன் மூலம் 3 கோடி 70 லட்சம ரூபாவை ஆண்டுதோறும் மிச்சம் பிடிக்க முடியும் என்று விவசாய அபிவிருத்தி ஆராய்ச்சித்துறை அமைச்சர் சந்திரா பண்டார தெரிவித்தார்.

நுவரெலியாவில்உள்ள சீதா எலிய விதை உருளைக்கிழங்குப் பண்ணையில் நேற்று நடந்த கூட்டம் ஒன்றில் பேசுகையில் முன்கண்ட தகவலை அமைச்சர் சந்திரா பண்டார வெளியிட்டார்.

விதை உருளைக் கிழங்கு உற்பத்தியில் நாடு தன்னிறைவு காணும் நிலையை அடைந்துளளது.

மேலும் 300 ஏக்கரில் விதை உருளைக் கிழங்கு பயிரிடப்படும் என்றும் அமைச்சர் அறிவித்தார். [ஓ-எ]

# முல்லைத்தீவில் மலேரியா

புதுக்குடியிருப்பு, ஜூன் 13

முல்லைத்தீவுப் பிரதேசத்தில் மீண்டும் மலேரியா பரவ ஆரம்பித்துள்ளது

கிராமப் புறங்களில் உள்ள, மலேரியா நுளம்புக்கான மலத்தியோன் தெளிப்பாளர்கள் மலத்தியோனை உரிய முறையில் தெளிக்காததும், மக்கள் அவற்றில் அக்கறை செலுத்தாததுமே காரணம் என்று கருதப்படுகின்றது (இ-94)

## நேற்று முதல்

# கிளிநொச்சி பரந்தன் பகுதிகளில் அலுவலகங்கள் ஸ்தம்பிதம்

யாழ்ப்பாணம், ஜூன் 14

கிளிநொச்சி, பரந்தன் பகுதிகளில் நேற்றுக் கச்சேரி, வங்கிகள் உட்பட அநேக அரச அலுவலகங்கள் ஸ்தம்பிதம் அடைந்தன.

போக்குவரத்து, சுகாதாரம் நீர்ப்பாசனம், மின்சாரம், பாடசாலைகள் தவிர்ந்த அனைத்து அலுவலகங்களும் நேற்று திங்கட்கிழமை முதல் இயங்கக் கூடாது எனத் தமிழீழ விடுதலைப் புலிகள் தடை விதித்திருந்தனர்.

இது சம்பந்தமாக விடுதலைப் புலிகள் அரச அலுவலகங்களுக்குத் தடை விதித்து இவ்விரண்டு கடிதங்களை அனுப்பியதாகவும், தெரிய வருகிறது. (அ-5)

# தமிழறிஞர் காலமானார்

சென்னை, ஜூன் 14

பிரபல தமிழறிஞர் க. வெள்ளைவாரணனார் நேற்றுச் சென்னையில் காலமானார்.

அவருக்கு வயது 71. தமிழ்ப்பணி புரிந்தமையைப் பாராட்டி அவருக்கு தமிழ்நாடு அரசு 'கலை மாமணி' பட்டத்தை அளித்துக் கௌரவித்தது.

தமிழ்மொழி பற்றி இருபது ஆய்வு நூல்களை திரு வெள்ளைவாரணனார் எழுதியிருக்கின்றார். அவற்றில் இரண்டுக்குத் தமிழக அரசின் பரிசு கிடைத்தது.

அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் தமிழ்த்துறை தலைவராகவும் அவர் பணியாற்றி இருந்தார். (ஓ-எ)

# சர்வானந்தா அங்குரார்ப்பணம் செய்துவைப்பார்

கொழும்பு ஜூன் 14

மேற்கு மாகாண சபையின் முதலாவது கூட்டம் இம்மாதம் 22 ஆம் திகதி ஆளுநர் எஸ் சர்வானந்தாவினால் அங்குராப்பணம்செய்துவைக்கப்படும் என்று அறிவிக்கப்பட்டது (ஓ-எ)

# ஆளுநராக பாக்கீர் பதவி ஏற்பு

கொழும்பு, ஜூன் 14

தென் மாகாண ஆளுநராக மூன்னாள் அமைச்சர் பாக்கீர் மாக்கார் நேற்று ஜனாதிபதி ஜெயவர்த்தன முன்னிலையில் பதவி ஏற்றார். (ஓ-எ)

# யாழ் நகரில் நேற்றும் வங்கிகள் திறந்திருந்தன

யாழ்ப்பாணம்,ஜூன் 14

யாழ். நகரில் திங்கட் கிழமையான நேற்றும் வங்கிகள் திறக்கப்பட்டிருந்தன ஆனாலும் நாளாந்த அலுவல்கள் வழமைபோல் நடைபெறவில்லை.

இந்தியஅமைதிப்படையினர் ஒரு சில வங்கி ஊழியர்களின் வீடுகளுக்குச் சென்று அவர்களைத் தமது வாகனங்களில் வங்கிகளுக்கு அழைத்து வந்தனர். எனினும் வாடிக்கையாளர்கள் வரவின்மையாலும், தூர இடங்களிலுள்ள அனேகமான ஊழியர்கள் வராமையாலும், வங்கிகளின் நாளாந்த அலுவல்கள் வழமைபோல் நடைபெறவில்லை.

தமிழீழ விடுதலைப் புலிகளின்சிவில்நிர்வாகத்தை சீர்குலைக்கும் ஒரு கட்டமாக திங்கள், வெள்ளி ஆகிய நாட்களில் வங்கிகள் இயங்குவதற்குத் தடை விதித்திருப்பது தெரிந்ததே. [ஒ-5]

# ஆபாசப் படங்களைக் காட்டினால் கடும் நடவடிக்கை

யாழ்ப்பாணம்,ஜூன் 14

எமது கலாசாரத்தை பாதிக்கும் முறைகேடான சம்பவங்களைத் சித்திரிக்கும் ஆபாசப் படங்களை மினிசினிமாக்களில் காட்டமாட்டோம். மீறுவோர் மீது கடுமையான ஒழுங்கு நடவடிக்கையை யாழ். மாவட்ட மினிசினிமா உரிமையாளர் சங்கம் எடுக்கும்.

இவ்வாறு நேற்று புதிதாக அமைக்கப்பட்ட யாழ் மாவட்ட மினிசினிமா உரிமையாளர்கள் சங்கக்கூட்டத்தில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

நேற்றுக்காலை பத்து மணியளவில் யாழ் மினிசினிமா திரையரங்கில் மினிசினிமா உரிமையாளர்கள் கலந்துகொண்ட கூட்டம் ஒன்று நடைபெற்றது.

கூட்டத்திற்கு திரு: எஸ் செல்லத்துரை தலைமை வகித்தார்.

மினிசினிமாக்களை இயங்கச்செய்வதற்கு ஆக்கபூர்வமான நடவடிக்கை எடுப்பதற்காக "யாழ். மாவட்ட மினிசினிமா உரிமையாளர்கள் சங்கம்" என்ற அமைப்பு உருவாக்கப் பட்டுள்ளது.

யாழ். மாவட்ட மினிசினிமா உரிமையாளர் சங்கத்தினர் பின்வரும் தீர்மானங்களையும் இயற்றியுள்ளனர்.

★ யாழ்ப்பாணத்தில் 150க்கும் மேற்பட்ட மினிசினிமாக்கள் உள்ளன. அனைத்து மினிசினிமாக்களின் உரிமையாளர்களும் யாழ் மாவட்ட மினிசினிமா உரிமையாளர் சங்கத்தில் அங்கத்தவராகச்சேரவேண்டும்.

✶ அங்கத்தவராகச் சேராத மினிசினிமாக்

(6 ஆம் பக்கம் பார்க்க]

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சின்னஞ்சிறு விளம்பரம்

### விற்பனைக்கு

Lohaman இன சிகப்பு முட்டையிடும் ஒரு நாள் கோழிக்குஞ்சு யூலை மாத முதல் வாரத்தில் விநியோகிக்கப்படும். முன் கூட்டியே பதிவு செய்யப்படும். விபரங்களுக்கு M. G. M. Forage Stores 208, 1st Cross st. Jaffna. [4218]

நீங்கள் ஆவலுடன் எதிர்பார்த்த புதியபங்குகள் விற்பனைக்கு வந்துவிட்டன. மேலதிக விபரங்களுக்கு உடன் தொடர்பு கொள்ளவும் Business Promoters (Pvt) LTD 198, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். [4223]

பாவித்த வீட்டுத் தளபாடங்கள் Brother தையல் மெஷின் ஹோல் செற் சாப்பாட்டு மேசை, கதிரைகள், அலுமாரி, சோகேஸ், காரியாலய மேசைகள், மீன்தொட்டி, Hot Plate, Dinner Set, இடாரம், கட்டில் மெத்தைகள், கண்ணாடி மேசைகள் மற்றும் பல உடன் மலிவு விற்பனைக்கு. M.தியாகராஜன் 326, பிரதான வீதி, யாழ்ப்பாணம். (செ‌ன். பற்றிக்ஸ் சந்தி அருகில்) (4388)

### கோழிக்குஞ்சு விநியோகம்

இரண்டு மாதத்தில், அதிக நிறையுள்ள வளர்ச்சியடையக் கூடிய (Lohmann) பிறவுன் சேவல் குஞ்சுகள் 22-06-88 புதன்கிழமை விநியோகிக்கப்படும். முன் கூட்டியே பதிவு செய்க. No. 9, கந்தையாலேன், [குராவத்தை ரோட்டு] கன்னாகம். (புகையிரத நிலையத்துக்கு அண்மையில்) [4226]

### தேவை

லேடன் மசல் வேலையில் அனுபவமுள்ள மெக்கானிக்கும், கேற், கிறில் வேலை செய்யக்கூடியவர்களும் தேவை. தொடர்பு கொள்க. சிவலிங்கம் மோட்டோஸ் 25, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம். [4216]

கொப்பிகள் கட்டுவதற்கு பெண் பிள்ளைகள் தேவை. பழகியவர்களுக்கு முன்னுரிமை அளிக்கப்படும். மிக் இன்டஸ்றிஸ் 26, 26/1, திருநெல்வேலி சிவன் புது வீதி, யாழ்ப்பாணம் காலை 8.00 மணிக்கும் 9.00 மணிக்கும் இடையில் நேரில் வரவும். [4422]

பல் (Denture) வேலை தெரிந்தவர் ஆண் வேலையாள் தேவை. வயதுக் கட்டுப்பாடுஇல்லை. யாழ் மாநகர சபைஎல்லைக்குள் வசிப்பவர்கள் விரும்பத்தக்கது. அனுபவத்திற்கு தகுந்த வேதனம் வழங்கப்படும். நேரில் பேசி தீர்மானிக்கலாம் முழு விபரங்களுடன் விண்ணப்பிக்கவும். C/o 228, உதயன் யாழ்ப்பாணம். (4200)

### முக்கிய அறிவித்தல்

திரு. சின்னத்தம்பி தம்பிராசா குலசிங்கம் PassPort No: 0212100H திரு. நாகன் மாணிக்கம் ரட்ணவேல் PassPort No: 0222741H மேற்படி நபர்கள் உடன் கீழ்க்காணும் விலாசத்துடன் தொடர்பு கொள்ளவும் திரு. K. மகேந்திரன், கூளாவடி ஒழுங்கை, ஆனைக்கோட்டை (4211)

### TYPEWRITERS

தட்டச்சு இயந்திரங்கள் வாங்கவும், விற்கவும் அத்துடன் சிறந்தமுறையில் திருத்திக் கொள்ளவும் Fudo Enterprises 39/17 3rd Lane, Power House Road, Jaffna (Samy & —Co Shabra அருகாமையில்) (C 5300)

### வகுப்புகள்

Spoken English with Grammer புதிய பிரிவு வெள்ளி தவிர்ந்த நாளாந்த வகுப்புகள் காலை 7. 00 - 8 00 மணி [45 வகுப்புகள்] S. B Iyar 12, வைமன் வீதி. நல்லூர். ஆரம்பம் 15-6-88 (4393)

108 Brown Road, Jaffna. A/L 88 வெப்ப இரசாயனம் ஆரம்பம் [17-06-88] வெள்ளி மாலை 4 30 P.m ஆசிரியர், சத்தீஸ் இவ்வாசிரியரின் வெப்ப இரசாயன நூல் வெளி வந்து விட்டது. (4227

Radio-TV, Air Conditioning-Refrigeration, வயறிங், வெல்டிங், மோட்டமெக்கானிசம், வைண்டிங், பிளம்பிங், Typing புதியபிரிவுகள் சிறந்த செய்முறைப் பயிற்சிகளுடன் ஆரம்பமாகின்றன. சர்வதேச அங்கீகாரம் பெற்ற சான்றிதழ் வழங்கப்படும். Vispa Engineering Aid Hall 328 நாவலர்ரோட் [ஆனைப்பந்தி சந்திக்கு அருகில்] யாழ்ப்பாணம். (4225)

### தவறிவிட்டது

11-06-88 காலை பத்து மணியளவில் யாழ்ப்பாணம் நவீன சந்தையடியில் 345450718 5V எனது அடையாள அட்டை தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து 5, அச்சுக்கூட வீதி, யாழ்ப்பாணம், அல்லது உதயன் காரியாலயத்தில் ஒப்படைக்கவும். [4228]

## STENOGRAPHER

Leading business establishment situated in Jaffna town requires the services of an experienced English Stenographer with an excellant command of the English Language.

Experience in Secretarial work is an advantage.

Apply before 20 th June 88 C/O Uthayan 230, 2 nd Lane Power House Road, Jaffna. (C. 5436)

## கொம்பியூட்டர் பயிற்சி

### தெல்லிப்பழையில்!!

**Diploma in Computer Programming & Data Processing in BASIC & COBOL**

Course இற்கான புதிய 2-ம் பிரிவு ஆரம்பமாகிறது!

**17-06-1988 (9-00 a.m.)**

- WEEK END & WEEK DAY பிரிவுகள் தனித்தனியாக இயங்கும்.
- தனிப்பட்ட கவனமெடுப்பதால் ஒரு பிரிவில் 12 மாணவர்களே அனுமதிக்கப்படுவர்.
- சேரும்போது செலுத்தவேண்டியது Rs 400/- மட்டுமே.

**IDP Institute of Data Processing**

K. K.S.Road —(துர்க்கை அம்மன் கோவிலடி) தெல்லிப்பழை. (C/5451)

## ஈராண்டு நினைவஞ்சலி



ரஞ்சித்குமார்

தோற்றம்: 1959-10-22 மறைவு: 1986-6 15

எங்கள் குடும்பக் காவியத்தின் மூத்த எழில் மலரே, எமைப் பேணிக் காப்பாய் நீ என்றிருக்க, இறைவன் தனக்கென உன்னைக் காணிக்கையாய் எடுத்தானே. புவியில் எமக்கு புகழ் சேர்ப்பாய் என்றிருக்க எமைக் கண்ணீரில் மிதக்கவிட்டு விண்ணுலகம் ஏன் சென்றாய், யாம் உமை நினைந்து நெஞ்சில் துயர் கொண்டு உம்மை நினைந்து தினம் வாடி நிற்கின்றோம்.

உம் பிரிவால் வாடும்!

மனைவி, பிள்ளைகள், பெற்றோர். சகோதரர்கள், சகோதரிகள், உற்றார், உறவினர்கள். (4441)

# பாவற்குளம் பகுதியில் தமிழருக்கு சொந்தமான வீடுகள் உடைப்பு

வவுனியா, ஜூன் 14 பாவற்குளம் முதலாம் யூனிட்டில் அமைந்துள்ள இலங்கை இராணுவ முகாமைச் சுற்றியுள்ள தமிழர்களுக்குச் சொந்தமான வீடுகள் உடைக்கப்பட்டு தரைமட்டமாக்கப்படுவதாக இப்பகுதி பொதுமக்கள் புகார் செய்துள்ளனர்.

பாவற்குளம் பகுதியின் பழைய ஊருவ ஆவரந்துலாவ, பாவற்குளம் 7ஆம் யூனிட் பாவற்குளம் முதலாம் யூனிட் ஆகிய பகுதிகளில் முகாமிட்டுள்ள இலங்கை இராணுவத்தினர் இப்பகுதிகளில் குடியிருந்துவரும் தமிழ் கிராமவாசிகளுக்குப் பல வழிகளிலும் தொல்லைகள் கொடுத்து வருகின்றனர் என்றும் தற்போது முகாம்களின் சுற்றுப்புறத்தில் உள்ள, குறிப்பாக முதலாம் யூனிட் பகுதியில் உள்ள வீடுகள் உடைக்கப்பட்டு வருவதாகவும் கூறப்பட்டது.

இரண்டு வாரங்களின் முன்பு பாவற்குளம்4ஆம் யூனிட்டில் வசித்துவந்த தமிழ் தம்பதியினர் கடத்திச் செல்லப்பட்டு கணவன் சித்திரவதைக்குள்ளாகி கொல்லப்பட்டதும், மனைவிக்கு இதுவரையில்என்னநடந்தது என்பதுகுறித்துஎதுவுமே தெரியவில்லை.

இதனைத் தொடர்ந்து இப்போது தொடங்கப்பட்டுள்ள வீடுடைப்புச் சம்பவங்கள் இப்பகுதிமக்களிடையே பதற்றத்தையும் தமது வீடுவாசல்கள் காணிகள் என்பன பறிபோய் விடுமோ என்ற பீதியும் ஏற்பட்டுள்ளன;

பொது மக்களின் புகாரை அடுத்து இது விடயம்அரசாங்கஅதிபர் இலங்கை, இந்திய பாதுகாப்புப் பகுதியின் உயரதிகாரிகள் ஆகியோரின் கவனத்திற்கு கொண்டு வரப்பட்டுள்ளதாக வவுனியா மாவட்ட பிரசைகள் குழுவின் தலைவர் டாக்டர் எஸ். வி. பரராஜசிங்கம் உதயனுக்குத் தெரிவித்தார். (ஞ-164)

### 133 வயதுமூதாட்டி

குருநகர், ஜூன் 14 113, வயது வரைஉயிர் வாழ்ந்தமூதாட்டிஒருவர் காலமானார்.

மிக்கேல் அம்மா சந்தனம் என்னும் மூதாட்டி யாழ் பழைய பூங்கா வீதியில் வசித்துவந்தார். (இ-51)

## ஆசிரியர்கள் தேவை

CHEMISTRY, ZOOLOGY & BOTANY ஆகிய பாடங்களை G.C.E A/L வகுப்பிற்கு கற்பிக்க தகுதியான ஆசிரியர்கள் தேவை.

தங்குவதற்கு இருப்பிட வசதியுண்டு.

விபரங்களுக்குத் தபால் மூலமோ நேரடியாகவோ தொடர்புகொள்ளவும்.

**கிளிநொச்சி கல்வி நிலையம்**

பரவிப்பாஞ்சான், கிளிநொச்சி. [4260]

## ஓராண்டு நினைவஞ்சலி





செ. பரமேஸ்வரி
தோற்றம்: 27- 3- 1935
அநியாய அழிப்பு: 27- 5- 1987

மூ. இராசதுரை
12- 1- 1907
27- 5- 1987

திதி:- 14-06-1988

எங்கள் அன்புத் தெய்வங்களே! அன்பிற்கோர் இருப்பிடமாய், பண்பிற்கோர் பிறப்பிடமாய் எம்மையும், உடன் பிறப்புக்களையும் ஆதரித்து வழி நடத்தினீர்கள். நீங்கள் இறைவனடி சேர்ந்து காலம் பல சென்றாலும் எங்கள் இதயங்களில் உங்கள் அன்பு ஒளி அணையாது. உங்கள் ஆத்மா சாந்தியடைய எந்நாளும் இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

சம்பர்மலை, வல்வெட்டித்துறை (4139)

அன்பு
கணவன், மருமகன், மகன், மருமக்கள்
பிள்ளைகள், பேரப்பிள்ளைகள், சகோதரர்கள்

## 1ஆம் ஆண்டு நினைவஞ்சலி

திரு. இளையதம்பி நவரட்ணம்
[உப முகாமையாளர் இலங்கை வங்கி]

தோற்றம்:- 17- 11- 1930
மறைவு:- 27- 05 1987
திதி: 14- 06- 1988

உமது ஆத்மா சாந்தி அடைய இறைவனை பிரார்த்திக்கின்றோம்.

மனைவி, சகோதரர்கள், சகோதரிகள், பெருமக்கள், மைத்துனிமார்கள் மைத்துனன்மார்கள்

இப்படிக்கு
சகோதரன்,
பாதுகாவல் உத்தியோகஸ்தர்,
மக்கள் வங்கி
ஊர்காவற்றுறை. [4118]

## ஓர் அரிய சந்தர்ப்பம்!

## தவற விடாதீர்கள்!!

கலர் படச்சுருள் கழுவுதல் முற்றிலும் இலவசம்!

- பிரதி ஒன்று — **4.75**
- கொழும்பில் நவீன கம்பியூட்டர் இயந்திரத்தில் பிரதி செய்யப்படுகிறது. மிகத்தரமானது.
- 3 முதல் 5 நாட்களுக்குள் விநியோகம்
- ஸ்ருடியோக்கள். 'ஷப்ரு' வாடிக்கையாளர்களுக்கு விசேட சலுகையுண்டு


எல்லா நாட்களிலும் காலை 8 மணி முதல் மாலை 5 மணிவரை ஏற்றுக்கொள்ளப்படும்.

தொடர்பு!

**SHABRA**

207, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்

## ஆறு நெஞ்சில் ஊற்றாய் வடியும் முதலாம் ஆண்டு கண்ணீர் அஞ்சலி



படைப்போன் அளிப்பு 10-4-68

படையினர் அழிப்பு 27-05 87

ம. நீலாகாந்தன்
யாழ்/ கொக்குவில் இந்துக் கல்லூரி
(வர்த்தகப் பிரிவு மாணவன்)

திதி 14-06-88

அன்பின் உருவே! பண்பின் சிகரமே!
பாசத்தின் நிலா! பதைக்கின்றோம்!
எங்குசென்றாய்?
வண்ணைச் சிவன் மடியில் வாழ்க்கை
முடித்தவனே
எண்ணித் துடித்துமோர் ஆண்டே
மறைந்ததையா
வண்ணமுகம் காணாத் துன்பமின்னும்
எத்தனைநாள்
வையகத்தில் உனக்கிணையாய் வருபவர்யார்
இனியெமக்கு
சொந்தமெனச் சுகமெனவே சுந்தரமாய்
நின்றவனே
விந்தைபல புரிந்தாய் விருப்போடு கல்விச்
சிந்தையதன் நிறைவில் நிம்மதியே தந்தாய்
-இன்று
அந்தமுகம் இல்லை அன்னையவன் அழைப்பில்
அனைத்தையுமே விட்டு அகன்றாயோ
அவனிடத்தே
குலக்கொடியே காந்தா உன்னாத்மா
நிலைத்திருக்க இறையடியில் இனித்து.

பிரிவுத் துயரால் கண்ணீரில் மிதக்கும்
22 புகையிரத நிலையவீதி' குடும்பத்தினர்,
கொக்குவில் உறவினர்கள், நண்பர்கள்,
[4442]

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

## அபி. சபை தொடர்ந்து இயங்கும்

கொழும்பு, ஜூன் 14

இந்த ஆண்டு இறுதி வரை மாகாணசபைகளுடன் மாவட்ட அபிவிருத்திச் சபைகளும் தொடர்ந்து இயங்க அனுமதிக்கப்படும் என்று தெரியவருகிறது.

ஜனாதிபதித் தேர்தல் முடிவடைந்த பின்னரே மாவட்ட அபிவிருத்திச் சபைகளின் எதிர்காலம் பற்றி முடிவு செய்யப்படலாம் என்று கொழும்பு வட்டாரங்கள் தெரிவித்தன. (ஒ-எ)

பாதிக்கப்பட்ட

## சனசமூக நிலையங்கள் பற்றிய விபரம் சேகரிப்பு

வேலணை, ஜூன் 14

யாழ் மாவட்டத்தில் அண்மைச் சம்பவங்களால் பாதிக்கப்பட்ட சனசமூக நிலையங்கள் பற்றி விபரங்களை தாமதியாது அனுப்பி வைக்குமாறு யாழ் மாவட்ட சனசமூக நிலையங்களின் சமாசத்தின் செயலாளர் திரு ஒ.சி. வரதராசா கேட்டுள்ளார்.

யாழ் மாவட்ட சமாசம் உதவி வழங்கும் நிறுவனங்களுடன் தொடர்பு கொண்டு உதவி வழங்குவதற்கான ஏற்பாடுகளை செய்வதற்காகவே இவ்விபரங்கள் கேட்கப்படுகின்றன என்று தெரிய வருகிறது. [இ-167]

இலவசக் கல்வி

கருவிலிக் கிராமிய மீளமைப்பு நிறுவனத்தின் ஆதரவில் நடைபெற்று வரும் பாலர் பாடசாலையில் கல்வி பயிலும் ஏழைச் சிறுவர்களுக்கு பாடசாலைக் கட்டணம் செலுத்துவதிலிருந்து விலக்கு அளிக்கப்பட்டுள்ளது. (இ-16)

## தண்ணீர் தாங்கி

கருவில் ஐயனார் அன்னதான மடத்துக்கு தண்ணீர் தாங்கி ஒன்று அமைக்கப்பட்டு வருகின்றது. (இ-16)

யாழ் மாவட்டத்தில்

# ஐந்து கோட்டக் கல்வி நிலையங்கள்

## ஆகஸ்டில் இயங்கும்

வட்டுக்கோட்டை, ஜூன் 14

யாழ்ப்பாண மாவட்டக் கல்வித் திணைக்களம் நிர்வாகத்தைப் பகிர்ந்தளிக்கும் முகமாக ஐந்து கோட்டக் கல்வி நிலையங்களை அமைக்கவுள்ளது.

எதிர்வரும் ஆகஸ்ட் மாத இறுதிக்குள் இந்த ஐந்து கோட்டக் கல்வி நிலையங்களும் அமைக்கப்படும்.

வேலணை, மருதனுமடம், பண்டத்தரிப்பு, யாழ்ப்பாணம், பருத்தித்துறை ஆகிய இடங்களிலேயே இந்தக் கோட்டக் கல்வி நிலையங்கள் அமைக்கப்படும்.

புங்குடுதீவு வேலணை ஆகிய கல்வி வட்டாரங்களை இணைத்து வேலணை கோட்டக் கல்வி நிலையமும்-

மானிப்பாய், கோப்பாய் ஆகிய கல்வி வட்டாரங்களை இணைத்து மருதனுமடம் கோட்டக் கல்வி நிலையமும்-

காங்கேசன்துறை வட்டுக்கோட்டை ஆகிய கல்வி வட்டாரங்களை இணைத்து பண்டத்தரிப்பு கோட்டக் கல்வி நிலையமும்-

நல்லூர், யாழ்ப்பாணம், சாவகச்சேரி ஆகிய கல்வி வட்டாரங்களை இணைத்து யாழ்ப்பாணம் கோட்டக் கல்வி நிலையமும்-

பருத்தித்துறை, உடுப்பிட்டி ஆகிய கல்வி வட்டாரங்களை இணைத்து பருத்தித்துறை கோட்டக் கல்வி நிலையமும் அமைக்கப்படும்.

யாழ். கல்வித் திணைக்கள அதிகாரி ஒருவர் இதனை உதயனுக்குத் தெரிவித்தார்.

இக் கோட்டக் கல்வி நிலையங்களை அமைப்பதற்கான சகல நடவடிக்கைகளையும் யாழ். கல்வித் திணைக்களம் மேற்கொண்டு வருகிறது.

இவற்றுக்கு முன்னோடியாக பருத்தித்துறை கோட்டக் கல்வி நிலையம் அமைக்கப்பட்டிருப்பது குறிப்பிடத்தக்கது. (இ-161)

## வாழ்க்கைத் திறன் கல்வி ஆசிரியர் பயிற்சி

மானிப்பாய் ஜூன் 14

வாழ்க்கைத் திறன் கல்வி என்ற பாடத்தை பாடசாலைகளில் கற்பிக்கவுள்ள ஆசிரியர்களுக்கு இம்மாதம் 20 ஆம் திகதி முதல் 26 ஆம் திகதி வரை பயிற்சி வகுப்புகளை நடாத்த கல்வி அமைச்சு தீர்மானித்துள்ளது.

இப்பயிற்சி வகுப்புகள் வியாங்கொடை-நைவல என்ற இடத்தில் உள்ள ஆசிரிய பயிற்சிக் கலாசாலையில் நடைபெறும்.

யாழ்ப்பாண மாவட்டத்தில் இருந்து சுமார் 30 ஆசிரியர்கள் வரை இப்பயிற்சியில் கலந்து கொள்ள உள்ளனர். (இ-90)

## திருவிழாவில் நகை அபகரிப்பு

வேலணை ஜூன் 14

புளியங்கூடல் மாரியம்மன் ஆலய வருடாந்த கொடியேற்ற உற்சவத்துக்கு வந்திருந்த இரு பெண்கள் தாலிக் கொடி சங்கிலி ஆகியவற்றை திருடர்களிடம் பறிகொடுத்தனர்.

இது சம்பந்தமாக நான்கு பேர் சந்தேகத்தில் கைது செய்யப்பட்டனர். (இ-167)

## பிரசைகள் குழு கோரிக்கை

காங்கேசன்துறை ஜூன் 14

"இந்திய அமைதிப் படையினரால் கைது செய்யும் நபர்களை துன்புறுத்துவதை தவிர்த்துக் கொள்ள வேண்டும்"

தெல்லிப்பழை கிழக்கு பிரசைகள் குழு தெல்லிப்பளை இந்திய அமைதிப் படை முகாம் பொறுப்பதிகாரியிடம் மேற்கண்டவாறு கோரிக்கை விடுத்துள்ளது. (இ-68)

# வலிகாமம் வடக்கு பிரதேச சபை பொது அறிவித்தல்

# புதிய மின் கட்டணம்

1-1-88 ஆம் திகதி தொடக்கம் மின் சக்தி. எரிபொருள் அமைச்சின் பணிப்பின் பிரகாரம் காங்கேசன்துறை, மயிலிட்டி, மல்லாகம், தெல்லிப்பளை பிரதேசத்தில் புதிய விகிதா சாரப்படி மின் கட்டணங்கள் அறவிடப்படும் எனப் பொது மக்களுக்கும், மின்நுகர்வோருக்கும் இத்தால் அறிவித்தல் தரப்படுகின்றது. எனவே இவ்வுயர்ச்சியினைக் கருத்திற் கொண்டு மின் பாவனையாளர்கள் தங்கள் மின் நுகர்ச்சியை வீண் விரயம் செய்யாமல் கட்டுப்பாட்டுடனும், அளவுடனும் உபயோகித்துப் பணவிரயங்களைக் கட்டுப்படுத்துமாறு அன்புடன் வேண்டுகிறேன்.

## (1) வீட்டுப்பாவனைக்குரிய இறுப்புக்கட்டணம்

(1) இந்த இறுப்பனவு தனியார் வசிப்பிடங்களில் மின்சாரத்தை வீட்டுப்பாவனைக்காகப் பாவிப்பவர்களுக்கும் (11) அப்படியான வீடுகளில் 25% க்கு மேற்படாத இடப்பரப்பினை (ஆகக்கூடிய 400 சதுர அடி) ஏதும் வியாபாரம் அல்லது தொழில் நோக்கத்திற்காகப் பாவிப்போருக்கும் பொருந்தும்.

- [அ] மாதாந்த நிலையான கட்டணம் ரூபா -5/-ம்
- [ஆ] 1-10 அலகுகளுக்கு. அலகொன்றுக்கு -/75 சதமும்
- [இ] 11-100 அலகுகளுக்கு, அலகொன்றுக்கு ரூபா 1/25-ம்
- [ஈ] 101-450 அலகுகளுக்கு, அலகொன்றுக்கு ரூபா 2/25-ம் அத்துடன் காலத்துக்குக் காலம் விதிக்கப்படும் எரிபொருட் சிராக்கல் கட்டணமும்.
- [உ] 450 அலகுகளுக்கு மேல், அலகொன்றுக்கு ரூபா 2/75-ம் அத்துடன் எரிபொருள் சிராக்கல் கட்டணமும் அறவிடப்படும்.

மேலும்

(11) வியாபார நோக்கத்திற்காக அல்லது தொழில் நோக்கத்திற்காகப் பாவிக்கப்படும் இடப்பரப்பிற்காக (25%) மேலதிகக் கட்டணம் கீழ் வரும் விகிதா சாரப்படி அறவிடப்படும்,

| | |
|---|---|
| 200 சதுர அடி வரையும்... | ரூபா 30/- |
| 200-300 சதுர அடி வரையும்... | ரூபா 40/- |
| 300-400 சதுர அடி... | ரூபா 50/- |

## (2) சமய சம்பந்தமான இடங்கள், அங்கீகரிக்கப்பட்ட தர்ம ஸ்தாபனங்கள் போன்றவற்றிற்கான இறுப்பு

இவை பகிரங்க வணக்கத்தலங்கள். இத்தலங்களுக்குள் அல்லது இத்துடன் சேர்ந்துள்ள இடத்திலுள்ள பூசகரின் வசிப்பிடம், சமூகசேவைப் பணிப்பாளரினால் சான்றிதழ் வழங்கப்பட்ட தர்மஸ்தாபனங்கள் முதியோர் அனாதை மடங்கள். வலது குறைந்தோர் விடுதிகள் போன்றவற்றுக்கான இறுப்பாகும்.

- (அ) மாதாந்த நிலையான கட்டணம்... ரூபா 5/-ம்
- (ஆ) முதல் 150க்கு அலகுகளுக்கு அலகொன்றுக்கு -/75 சதமும்
- [இ] 150க்கு மேற்பட்ட அலகுகளுக்கு அலகொன்றுக்கு ரூபா 2/25ம்

எரிபொருள் சிராக்கல் கட்டணமும் அறவிடப்படும்.

அல்லது

ஏற்கனவே அனுமதிக்கப்பட்ட தர்ம ஸ்தாபனங்கள். சமய வழிபாட்டுத்தலங்கள் போன்றவற்றிற்கான 1-3-85ஆம் திகதி தொடக்கம் மீளாய்வு செய்யப்பட்ட இறுப்பின் பிரகாரம் வரையறுக்கப்படாமல் இச்சலுகையைப் பெற்றுவந்தவர்களுக்கு 1987-ம் ஆண்டின் சராசரி மாதாந்த நுகர்ச்சியின் அலகுகளின் அலகொன்றிற்கு சதம் -75/ம் (எரிபொருள் கட்டணம் விலக்கப்பட்டுள்ளது) இச்சராசரிக்கு மேற்பட்ட அலகுகள் ஒவ்வொன்றிற்கும் ரூபா 2/25ம் அதற்கான எரிபொருட் சிராக்கல் கட்டணமும் விதிக்கப்படும்.

## [3] விதிவெளிச்சம்

பிரதேசசபையால் ஈடுசெய்யப்படும்.

## [4] பொது நோக்கங்களுக்கான இறுப்பனவு

இவை கடைகள், அலுவலகங்கள், வங்கிகள் பண்டகசாலைகள், பொதுக்கட்டடங்கள், ஆஸ்பத்திரிகள், கல்வி நிறுவனங்கள், பொழுதுபோக்கு இடங்கள் மேலும் இதுபோன்ற இடங்களுக்குப் பொருந்தும்.

4-1. மதிப்பிடப்பட்ட தேவை 50 கே வி ஏ க்கும் குறைவான வழங்கல்களுக்குப் பொருந்துவன.

- (அ) ஒவ்வொரு அலகுகளுக்கும் அலகொன்றுக்கு ரூபா 2/25 ம் எரிபொருள் சிராக்கல் கட்டணமும்.
- (ஆ) கீழ்வரும் விகிதாசாரப்படி மாதாந்த நிலையான கட்டணமும்.
  - 5 கே. வி. ஏ. வரையும் ரூபா 30/-
  - 5 கே. வி. ஏ. தொடக்கம் 10 கே. வி. ஏ வரையும். ரூபா 50/-
  - 10 கே. வி. ஏ. க்கு மேல் 50 கே. வி. ஏ க்கு குறைய ரூபா 150/- ம் அறவிடப்படும்.

4-2 மதிப்பிடப்பட்ட தேவை 50 கே. வி. ஏ க்கும் அதற்கு மேலுமுள்ள வழங்கல்களுக்குப் பொருந்துவன.

- (அ) அலகுகள் ஒவ்வொன்றிற்கும் ரூபா 2/15 அத்துடன் எரிபொருள் சிராக்கல் கட்டணமும.
- (ஆ) மாதாந்தம் பெறப்பட்ட உச்சத் தேவையின் கே. வி. ஏ. ஒன்றுக்கு ரூபா 125/- வீதப்படியும்.
- (இ) நிலையான கட்டணம் ரூபா 300/00 ம் அறவிடப்படும்.

## [5] கைத்தொழில் இறுப்பனவு

இவை முழுமையாகவோ அல்லது பிரதானமாகவோ தொழிற்சாலைகள், தொழிற்களங்கள், வார்ப்புச்சாலைகள், எண்ணெ ஆலைகள், நூற்பு நெசவு நிலையங்கள், பம்புநிலையங்கள், துறைமுக கப்பல் தங்குமிட நிர்மாணங்கள் மற்றும் இதனையொத்த கைத்தொழில் நிர்மாணங்களுக்கான மின் இரசாயன மின் இயக்க நடவடிக்கைகளுக்கு ஏற்புடையதாகும்.

5-1 மதிப்பிடப்பட்ட தேவை 50 கே. வி. ஏகுக் குறைவான வழங்கல்களுக்குப் பொருந்தும்.

- (அ) ஒவ்வொரு அலகுகளுக்கும் அலகொன்றிற்கு ரூபா 2/15 அத்துடன் எரிபொருள் சிராக்கல் கட்டணமும்.
- (ஆ) கீழ்வரும் விகிதாசாரப்படி மாதாந்த நிலையான கட்டணமும்.
  - 5 கே. வி. ஏ. வரையும் ...... ரூபா 30/-
  - 5 கே. வி. ஏ. தொடக்கம் 10 கே. வி. ஏ. வரையும் ரூபா 50/-
  - 10 கே. வி. ஏ. க்கு மேல் 50 கே. வி. ஏ. குறைய ரூபா 150/-ம் அறவிடப்படும்

5-2 மதிப்பிடப்பட்ட தேவை 50 கே. வி. ஏ க்கும் அதற்கு மேலுமுள்ள வழங்கல்களுக்கும் பொருந்தும்

- (அ) அலகுகள் ஒவ்வொன்றிற்கும் ரூபா 2-15 எரிபொருள் சிராக்கல் கட்டணமும்.
- (ஆ) மாதாந்தம் பெறப்பட்ட உச்சத் தேவையின் கே. வி. ஏ. ஒவ்வொன்றிற்கும் ரூபா 100/-வீதமும்.
- (இ) நிலையான கட்டணம் ரூபா 300/-ம் அறவிடப்படும்.

## (6) ஹோட்டல் இறுப்பனவு

இவை உல்லாசப் பிரயாண ஹோட்டல்கள். சிற்றுண்டிச்சாலைகள் மற்றும் அதனையொத்த இடங்களுக்குப் பொருந்தும.

6-1 மதிப்பிடப்பட்ட தேவை 50 கே. வி. ஏ. க்கு குறைவான வழங்கல்களுக்குப் பொருந்தும்.

- (அ) அலகு ஒவ்வொன்றிற்கும் ரூபா 2/25 அத்துடன் எரிபொருள் சிராக்கல் கட்டணமும்.
- (ஆ) கீழ் வரும் விகிதாசாரப்படி மாதாந்த நிலையான கட்டணமும்
  - 5 கே. வி. ஏ வரையும் ......ரூபா 30/-
  - 5 கே. வி. ஏ தொடக்கம் 10 கே. வி. ஏ. வரையும்......ரூபா 50/-
  - 10 கே வி ஏ. க்கு மேல் 50 கே. வி. ஏ, க்குக் குறைய ரூபா 150/-ம் அறவிடப்படும்.

6-2 மதிப்பிடப்பட்ட தேவை 50 கே வி. ஏ க்கும் அதற்கு மேலுமுள்ள வழங்கல்களுக்குப் பொருந்தும்.

- (அ) அலகுகள் ஒவ்வொன்றிற்கும் ரூபா 2/10ம் அத்துடன் எரிபொருள் சிராக்கல் கட்டணமும்.
- (ஆ) மாதாந்தம் பெறப்பட்ட உச்சத்தேவையின் கே. வி. ஏ. ஒன்றுக்கு ரூபா 175/- வீதப்படியும்.
- (இ) நிலையான கட்டணம் ரூபா 300/-ம் அறவிடப்படும்.

## [7] தற்காலிக மின்விநியோகம்

- (அ) அலகு ஒன்றிற்கு ரூபா 3/-ம் எரிபொருள் சிராக்கல் கட்டணமும்.
- (ஆ) பொருட்களின் வாடகையாக, பெறுமதியின் 10%மும்
- (ஊ) கூலிகள், மேற்பார்வைக் கட்டணமும்
- (ஈ) நுகர்ச்சிக்கான ஒரு வைப்புப் பணமும் அறவிடப்படும்.
- (உ) களியாட்ட விழா போன்ற தேவைகளுக்கு மதிப்பிடப்பட்ட கட்டணத்திற்கு மேலதிகமாக கே வி. ஏ. ஒன்றுக்கு ரூபா 50/- அறவிடப்படும்.

## [8) பொது அறவீடுகள்

(1)

- (அ) புதிய நிறுவுதல்களுக்கு ஏற்கனவே உள்ள நிறுவுதல்களின் விஸ்தரிப்புகளுக்கும் முதல் சோதனை இலவசம்.
- (ஆ) முதல் சோதனை திருப்தியளிக்கவில்லையாயின் ஒவ்வொரு மேலதிக சோதனைகளுக்கும்.

| | |
|---|---|
| ஒரு நிலை நிறுவுதல்... | ரூபா ...50/- |
| மூன்று நிலை நிறுவுதல் .. | ரூபா ...150/- |

## (2) மானிப்பரிசோதனை

பாவனையாளரின் வேண்டுதலின் பேரில் மானிப் பரிசோதனை ரூபா 100/-

(மானியம் செம்மை இல்லாத தன்மை 2½ சதவீதத்தை விட கூடவோ அல்லது குறைவாகவோ காட்டுமேயானால் கட்டணம் திருப்பிக் கொடுக்கப்படும்.)

## (3) கொடுப்பனவுகளின் தாமதத்திற்கான விதிப்பனவுகள்

பாவனையாளர் ஒருவரின் மின்சார விதிப்பனவுக் கணக்குகள் 30நாட்களுக்கு மேல் நிலுவையாக உள்ள சந்தர்ப்பத்தில் அம் மின்சார விநியோகத்தைத் துண்டிப்பதற்குக் கட்டளை இடப்படும். துண்டிப்புக்கட்டளை இடப்படுமாயின் நிலுவைத் தொகையுடன் அதன் 10 சதவீத மேலதிகக் கட்டணமும் அத்துடன் துண்டிப்பு நடவடிக்கை எடுக்கும் கட்டணமாக ரூபா 100 / 00 ம் அறவிடப்படும்.

(4) ஒழுங்கு விதிகளை மீறுபவர் மீது (மானிகளின் மாற்றங்கள் செய்தல், மானி முத்திரைகள், கட்அவுட் முத்திரைகளை சேதப்படுத்துதல் இவை போன்றவை) அவர்களது மின்சாரம் துண்டிக்கப்படுவதுடன் ரூபா 2000 /- விதிப்பனவு அறவிடப்பட்டு மானியின் பதியப்படாத மின்பாவனைக்காகக் கட்டணம் சபையினால் மதிப்பீடுசெய்யப்பட்டு அக்கட்டணத்துடன் 25% மேலதிகக் கட்டணமும் அறவிடப்படும். மதிப்பீட்டு முறையும் காலமும் சபையின் தன்விருப்பு உரிமையை பொறுத்தது.

(5) சட்டவிரோத மின் விஸ்தரிப்புக்களை, வேறு கட்டடங்களுக்கு [மீற்றர் மூலம்] கொடுத்தலுக்காக மேலதிகக்கட்டணமாக ரூபா 250/- அறவிடப்படும்.

(6) பாவனையாளர்களின் சொந்த விருப்பத்தின் பேரில் மின் விநியோகம் துண்டிக்கப்பட்டபின் மீண்டும் விநியோகம் வழங்குவதற்கு கட்டணம் ரூபா 100/- அறவிடப்படும்.

(7) மின்சாரம் தடைப்படும் போது, சேவையின் உருக்கியை மீளப் பொருத்துவதற்காக

ஒருநிலைக்கு ...... ரூபா 10 / -

மூன்று நிலைக்கு . ... ரூபா 20 / - அறவிடப்படும்.

இதுவிடயமாக இன்னும் பூரண விளக்கம் தேவையாயின் காங்கேசன்துறை, மயிலிட்டி, மல்லாகம், தெல்லிப்பளை அலுவலகங்களில் பெற்றுக்கொள்ளலாம்.

காலதாமதமாகச் செலுத்தப்படும் நிலுவைப்பணங்களுக்கு மேலதிகப் பணம் செலுத்த வேண்டியதுடன் துண்டிக்க வேண்டிய துர்பாக்கிய நிலையும் ஏற்பட இருப்பதால் தயவுசெய்து மாதாந்த சிட்டைகள் வரும் வரையும் காத்திராமல் மாதாந்தம் தவறாமல் குறைந்தது ஒரு சராசரித் தொகையைக் காரியாலயத்திற்குச் சென்று செலுத்தி வருவதால். மேலே கூறிய மேலதிகப் பணமோ அல்லது துண்டிக்க வேண்டிய சந்தர்ப்பத்தையோ சுலபமாக விலக்கிக் கொள்ளலாம் எனவும் ஆலோசனை கூறவிரும்புகின்றேன்.

**பொன்னம்பலம் பாலசிங்கம்**
விசேட ஆணையாளர்,
வலிகாமம் வடக்கு பிரதேச சபை.

8-6-1988. (C-5453)

தனியார்துறை ஊழியர்கள்

## 7 பேருக்கு மீண்டும் வேலைவாய்ப்புக் கிடைக்கும்?

யாழ்ப்பாணம், ஜூன் 14

கடந்தகால வன்செயல்களினால் பாதிக்கப்பட்டு, இடம்பெயர்ந்ததால் வேலை இழந்த முதலாளிகள் சம்மேளனத்தில் அங்கம் வகிக்கும் தனியார்துறை நிறுவனங்களில் பணிபுரிந்த ஊழியர்களில் 7 பேருக்கு விரைவில் மீண்டும் வேலைவாய்ப்புக் கிடைக்கலாம்.

பாதிக்கப்பட்ட ஊழியர் இணைப்புக்குழுவின் நிர்வாக சபை உறுப்பினர் ஒருவர் உதயனுக்கு இதனைத் தெரிவித்தார்.

ஏற்கனவே அறிவிக்கப்பட்டபடி வேலையிழந்த பல அரச ஊழியர்கள் தற்பொழுது வேலை பெற்று வருகின்றனர். ஆனால் தனியார்துறை ஊழியர் நிலை இழுபறியாகவே இருந்தது.

இதனை அடுத்து கடந்த மாத இறுதியில் எமது தூதுக்குழு ஒன்று சம்பந்தப்பட்ட அமைச்சர்களையும், அதிகாரிகளையும் கண்டு தனியார்துறை ஊழியர்களின் விடயம் பற்றி பேச்சு நடத்தியது.

அதனைத் தொடர்ந்து முதலாளிகள் சம்மேளனத்தில் அங்கம் வகிக்கும் நிறுவனங்களில் கடமையாற்றி வேலை இழந்த தனியார்துறை ஊழியர்களின் பெயர்களை முதல் கட்டமாகத் தரும்படி கோரப்பட்டது.

எமக்கு கிடைத்திருந்த விண்ணப்பங்களைப் பரிசீலித்தோம். அவ்வாறு பரிசீலனை செய்ததில் 7 பேர்களுடைய பெயர்கள் மட்டுமே கிடைத்தன. எனவே அவற்றைத் தொழில் வாய்ப்பு அமைச்சுக்கும், புனர்வாழ்வு அமைச்சுக்கும் சமர்ப்பித்துள்ளோம்.

வெகுவிரைவில் இவர்களுக்கு மீண்டும் வேலை கிடைக்கும். வேலை வழங்க இந் நிறுவனங்கள் முன்வராத பட்சத்தில் பேரின் நஷ்டஈடு பெற்றுக் கொடுக்கப்படும்.

இவ்வாறு அவர் மேலும் தெரிவித்தார். (ஓ-9)

## கொலையை அடுத்து வேலிகள் திறந்து விடப்பட்டன

நான்கு பிள்ளைகளின் தந்தையான சின்னத்துரை நந்தகோபாலன் என்பவர் சுட்டுக் கொலை செய்யப்பட்டதை அடுத்து பிளவத்தை, தொல்புரம், கலைநகர், சிவன்கோவிலடி, வட்டுக்கோட்டை ஆகிய பகுதிகளில் பல இடங்களில் வேலிகள் திறந்து விடப்பட்டுள்ளன.

இந்திய அமைதிப் படையினரின் வேண்டுகோளுக்கிணங்க வே பொதுமக்கள் தங்கள் தங்கள் வேலிகளைத் திறந்து விட்டுள்ளனர்.

தினமும் இரவு பகலாக ரோந்து சுற்றி வருகின்றனர்.

இங்குள்ள வீட்டு வேலிகள் மாத்திரமன்றி உள் வேலிகளும் திறந்துவிடப்பட்டுள்ளன.

தற்போது இங்குள்ள நான்கு, ஐந்து வீடுகளை ஒரே முறையில் பார்க்கக் கூடியதாக இருக்கிறது.

அது மட்டுமன்றி வெற்றுக் காணிகள், மலசல கூடங்கள் என்பனவும் வெளியாகத் தெரிகின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

18-06.1988இல் நிகழும்
வியாழமாற்றம்
உங்களுக்கு நன்மையளிக்குமா?
வாசியுங்கள் !
ஆனி மாத சோதிடமலர்
விலை ரூபா 4.00/- மட்டுமே!
எங்கும் கிடைக்கும்.
(4273)

காணி, வீடு, விற்கவும் வாங்கவும்
காணி மீதான ஈட்டுக்கடன் வசதிகளுக்கும்
நிதானமான திருமண சேவைகளுக்கும்
"லாலா அசோசியேட்ஸ்"
"பதிவு பெற்ற காணி ஒப்பந்தக்காரர்களும், ஏலவிற்பனையாளர்களும்,
185/9, கஸ்தூரியார் வீதி,
(முதலாம் மாடி) "நியூ லலிதா பில்டிங்"
யாழ்ப்பாணம்.
(அனுமதிக்கப்பட்ட 1½ /- (18) வீதமே
(4267) கமிஷனாக அறவிடுகின்றோம்.

T. இந்திரநாதன்
M Three Travels
அளிக்கும்
மத்திய கிழக்கு
★ வேலை வாய்ப்பு ★
எமது சேவை தூய்மையானது
துரிதமானது
● உடனடி பிரயாண வாய்ப்புக்கள்
* வைகாசி முற்பகுதியில் கடவுச் சீட்டு தந்த 80 பேர் 2-6-88ல் பிரயாணம் செய்துவிட்டார்கள்.
★ 23 5-88 ன் பின் கடவுச்சீட்டு தந்தவர்கள் 8-6-88, 10-6-88ல் 52பேர் பிரயாணம் செய்து விட்டார்கள்.
* என்னிடம் கடவுச் சீட்டுத் தந்தவர்கள் 43 பேர் இன்னும் 2 கிழமைகளில் பிரயாணம் செய்யப் போகிறார்கள்.
* கீழ்காணும் வேலை வாய்ப்புகள் தற்சமயம் என்னிடம் உண்டு. உடனடியாக கடவுச்சீட்டு, கடவுச்சீட்டு முன்பக்கப் பிரதி 10 படங்களுடன் தொடர்பு கொள்ளவும். 2 கிழமைகளில் பிரயாணம். எல்லா வசதிகளும் செய்து தரப்படும்.
[I] சவூதி அரேபியா
[1] பாரமரிப்பு கிளீனேர்ஸ் [Maintenance Cleaners] } 550 றியால்
[2] கிளீனிங் கூலியாட்கள் [Cleaning Labourers } 500 றியால்
[3] கனரக வாகன சாரதிகள் Equipment Drivers } 800 றியால்
21 வயதுக்கு மேற்பட்டவர்கள்
OPEN VISA [திறந்த விசா]
[1] விவசாய மேற்பார்வையாளர் (Agricultural Supervisors) }
விவசாய கூலியாட்கள் (Agriculturial Labourers } 500 றியால்
(25 வயதுக்கு மேற்பட்டவர்கள்)
[II] குவைற் (Kuwait)
பொது கிளீனேர்ஸ்
[III] மத்திய கிழக்கு நாடுகளுக்கு
House Maids
[பணிப்பெண்கள்]
உங்களுக்கு சேவை செய்ய
திரு. T. இந்திரநாதன்
காத்திருக்கிறார்
தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி:-
T. இந்திரநாதன்
M Three Travels
சோதி லேன், கல்லூரி வீதி,
காங்கேசன்துறை.
பஸ் வழி:- 763, 764, 769.
[C-5442]

மாடுகளுக்கு

# செயற்கைமுறை சினப்படுத்தல் நிறுத்தப் பட்டது

யாழ்ப்பாணம், ஜூன் 14

வடபகுதியில் கோமாரி நோய் பரவியுள்ளதை அடுத்து திருநெல்வேலி உட்பட வடக்கு, கிழக்கு பகுதிகளிலுள்ள அனைத்து செயற்கை முறை சினைப் படுத்தும் நிலையங்களிலும் கால்நடைகளுக்குச் சினைப்படுத்தும் நடவடிக்கைகள் இடைநிறுத்தம் செய்யப்பட்டுள்ளன.

இதேவேளையில் கால்நடைச் சொந்தக்காரர்கள் இயற்கைமுறைச் சினைப்படுத்தல் நடவடிக்கைகளிலும் தங்களது கால்நடைகளை ஈடுபடுத்த வேண்டாம் என கால்நடை உற்பத்தி சுகாதாரத் திணைக்களத்தினரால் அறிவுறுத்தப் பட்டுள்ளனர்.

மேலும் தொடர்ந்து கால்நடைகளுக்குக் கோமாரி நோய் தொற்றும் அபாயம் இருப்பதனால் அவ்வாறான நோய் அறிகுறிகள் காணப்படும் பட்சத்தில் அருகில் உள்ள கால்நடை வைத்தியரை அணுகும்படியும்-

குறிப்பிட்ட கால்நடைக்கு கோமாரி நோய் உண்டெனக் கால்நடை வைத்தியர் உறுதிப்படுத்தும் பட்சத்தில் அந்தக் கால்நடையைக் கொன்றுவிடும்படியும்-

இறைச்சிக்காகவோ வேறு தேவைகளுக்காகவோ விற்றுவிடவேண்டாம் எனவும் அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.

## கோதுமை உடன்பாடு கைச்சாத்து

கொழும்பு, ஜூன் 14

பி. எல். 480 உதவித் திட்டத்தின் கீழ் அமெரிக்கா இலங்கைக்கு நன்கொடையாக வழங்கும் ஒரு கோடி டாலர் பெறுமதியானகோதுமை சம்பந்தமான உடன்பாடு கொழும்பில் கைச்சாத்திடப்பட்டது.

(ஓ-எ)

ஓராண்டு நினைவஞ்சலி



திரு. செல்லப்பா மகேந்திரன்
(லிகிதர், உதவி அரசாங்க அதிபர் பணிமனை) சாவகச்சேரி.
ஜனனம்: 1934-05-17 மரணம்: 1987-05-27
திதி: 1987-06-14

கள்ளம் சிறிதுமில்லா
வெள்ளை மனத்துடனே,
உள்ளம் நிறைந்திடவே
உதவிகள் பலசெய்து !
இன்னலென வந்தவர்க்கு
உள்ள பொருளீந்து
மின்னலென மறைந்தீரே...!
ஏனோ விரைந்து சென்றீர் ?
உங்களின் ஆத்மா சாந்தி அடைவதற்காய்
இறைவனிடம் கையேந்தும்...

நுணாவில் கிழக்கு. சாவகச்சேரி. மனைவி, பிள்ளைகள், மருமகன். (4271)

31 ஆம் நாள் நினைவு தினம்



முருகேசு சிவலிங்கம்
(ஓய்வு பெற்ற கமநல சேவை திணைக்கள உத்தியோகத்தர்)
தோற்றம்: 13 - 7 - 1913
மறைவு: 15 - 5 - 1988

அன்போடும், பாசத்தோடும், பொறுமையோடும், நேர்மையோடும் வாழ்ந்த எங்கள் அன்புத் தந்தையே! எப்போது உங்கள் அன்பு கனிந்த முகத்தை காண்போம் என்று உங்கள் நினைவோடு வாழுகிறோம். உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனை வேண்டுகிறோம்.

மனைவி: இராசம்மா.
பிள்ளைகள்: மகேஸ்வரலிங்கம், தனேஸ்வரலிங்கம் சுலோஜனா, சர்வேஸ்வரலிங்கம், கௌசலா, திரௌபதி,
மருமக்கள்: கணராஜசிங்கம் A. V. S நாதன், யோகராணி, சீதாதேவி
பேரப்பிள்ளைகள்: சசிகரன், தபோதினி பிரபாகரன், ஜெகதினி, கோபிகா
(4270)

1 ஆம் ஆண்டு கண்ணீர் அஞ்சலி





ஐ. நாகநாதன் (இந்திரன்) அ. பிறேமகுலசிங்கம் (பிறை)
அன்னையின் மடியில்
(22-02-1968) (08-02-1966)
அநியாய முடிவில்
(27-05-1987)
திதி: 14-06 1988

தங்கத் தமிழ் மண்ணில் தன்னிகரற்று வாழ்ந்தீரே!
கல்வியும் கலையும் இருகண்களாய் திகழ்ந்தீரே!
உங்கள் நாடக வசன் எங்கே!
நகைச்சுவை வார்த்தை எங்கே!
இரக்கமற்ற இனவெறியர் இருவரையும்
ஓரிடத்தில் ஒன்றாக வீழ்த்தினரோ!
ஐயகோ நீங்கள் எம்மை ஆழ்த்தினீரோ துயர்க்கடலில்!
மண்ணுலகை விட்டு மர்மமாய் மறைந்தீரோ!
விண்ணுலகில் நீங்கள் விடிவெள்ளியா நிறைந்தீரே!

மைத்துனரே! மருமகனே!
உங்கள் ஆத்ம சாந்திக்காக உங்களை வஞ்சித்த வேலவனை கெஞ்சுகிறேன் எந்நாளும்.
S. கனகசிங்கம்.

உங்கள் உதிர்வாலே உருக்குலைந்து சருகானோம் உதிர்வால் வாடும்

கெருடாவில் V. ஐயாத்துரை குடும்பம். உற்றூர்.
கொம்மாந்துறை S. அழகையா குடும்பம்
உறவினர், நண்பர்கள்.
(4269)

இரண்டாம் ஆண்டு நினைவு



அமரர். திரு. மா. ஐயாத்துரை
திதி:- 14. 06. 1988

உன்திரு ஊன் தனையே உருக்கி எம் உயர்வுக்காய் ஒளிபரப்பி வானுலகு ஏகிவிட்ட வள்ளலே நீ மறைந்து ஆண்டுகளிரண்டானாலும் அகத்தினில் உன் ஒளி உருவம் அணையாத திருவிளக்காய் மிளிருதய்யா.

என்றும் அன்புடன் நினைவு கூரும்
அன்பு மனைவியும், பிள்ளைகளும்,
மருமக்களும், பேரப்பிள்ளைகளும்.

"பருளாய் முருகன்"
கல்லவேம்படி,
சுழிபுரம்.
(4438)


பிரயாண ஒழுங்குகள்
சவூதி அரேபியா - குவைத்
OPEN VISA (25 வயதிற்கு மேற்பட்டவர்கள்)
சவூதி அரேபியா Farmers
சம்பளம் 500 + 100
ஒப்பந்தம் 3வருடம் [10 நாட்களுக்குள் பயணம்]
சவூதி அரேபியா
றெயில்வே கிளீனேர்ஸ்
பாடசாலை கிளீனேர்ஸ்
எயர் போர்ட் கிளீனேர்ஸ்
சம்பளம் 350 + 100
சாரதி H. V 600 + 100
ஒப்பந்தம் 2 வருடங்கள்
குவைத் -
ஆஸ்பத்திரி கிளீனேர்ஸ்
இன்ர நாஷனல் கிளீனேர்ஸ்
சம்பளம் 30 K D
ஒப்பந்தம் 2 வருடங்கள்
சவூதிக்குப் போக கடவுச்சீட்டு தந்தவர்கள் எம்மிடம் தொடர்பு கொள்ளவும்.
முற்பணம் அறவிடப்படமாட்டாது.
காரியாலயம் எல்லா நாட்களிலும் திறக்கப்படும்.
தொடர்பு:
கோல்டன் ரவல்ஸ் & ரூர்ஸ்
புகையிரதநிலைய வீதி,
சுன்னாகம்.
கிளை இல 1
கோல்டன் ரவல்ஸ் & ரூர்ஸ்
மயிலங்காடு,
ஏழாலை.
(C-5432)



| | | |
|---|---|---|
| 1. | S. ரவிக்குமார் | J 0220414 |
| 2. | V. S சந்திரன் | J 0184257 |
| 3. | K. உதயகுமாரன் | J 0130183 |
| 4. | S. M. சண்முகநாதன் | H 0107588 |
| 5. | சிவனேசன் | J 0107641 |
| 6. | S. பாஸ்கரலிங்கம் | J 0128204 |
| 7. | P. பதிதாஸ் | J 0124686 |
| 8. | P. தங்கராசா | G 0158236 |
| 9. | V. பஞ்சலிங்கம் | J 0072516 |
| 10. | S. கேதாரசிங்கம் | H 0254030 |
| 11. | M. குணரட்ணம் | J 0123859 |
| 12. | p. தயாபரன் | J 0325148 |
| 13. | A. M. J. சதீஸ்குமார் | H 0329034 |
| 14. | V. புவனேஸ்வரன் | H 0054566 |
| 15. | N. K ரவிச்சந்திரன் | H 0253294 |
| 16. | R. ரவிசசந்திரன் | H 0443908 |
| 17. | K. ரவிச்சந்திரன் | J 0343493 |
| .18 | K. ராஜரட்ணம் | G 0321489 |

இவர்கள் அனைவரும் 20- 06-88 க்கு முன்னர்காரியாலயத்தில் வந்துசந்திக்கு மாறு கேட்டுக்கொள்கிறோம்.
(C5434)

முதலாம் ஆண்டு நினைவு அஞ்சலி



திருமதி. தங்கம்மா தம்பிப்பிள்ளை
தோற்றம்:- 21- 03- 1904 மறைவு:- 26- 5- 1987
திதி 13- 06- 88

உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

"தனகரபி" கல்வளை, சண்டிலிப்பாய். மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்.
(4437)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பொய்யாமொழி

குறள்:
அன்புடைமை ஆன்ற குடிப்பிறத்தல் வேந்தவாம்
பண்புடைமை தூதுரைப்பான் பண்பு.

பொருள்:
அன்புடையவனுதல், தகுதியான குடிப் பிறப்பு உடையவனுதல், அரசர் விரும்பும் சிறந்த பண்பு உடையவனுதல் ஆகிய இவை தூது உரைப்பவனுடைய தகுதிகள்.


# உதயன்

உண்மை - அறிவாளமை - திடநிலைமை

இல:-298/8 தூவலர் வீதி, தொலைபேசி 24803
யாழ்ப்பாணம். 22073
14-06-1988 த.பெ. இல 88


## நல்லதாக முடியட்டும்!

வடக்கு, கிழக்கு மாகாணங்களில் நாளை புதன்கிழமை வெள்ளைக் கொடித்தினம் அனுஷ்டிக்கப்படுகிறது. உடனடி யுத்தநிறுத்தம், பேச்சுவார்த்தை, சமாதானம் ஆகியவற்றை இந்திய அரசிடம் வலியுறுத்தியே வெள்ளைக் கொடி தினம் அனுஷ்டிக்கப்படுகிறது.

தமிழ்ப் பேசும் மக்கள் சார்பில், இந்த வெள்ளைக்கொடி இயக்கத்தை, யாழ்ப்பாணம் மாநகர ஆணையாளர் திரு. சி. வி. கே. சிவஞானம் ஏற்பாடு செய்திருக்கிறார்.

நிபந்தனையற்ற யுத்த நிறுத்தத்தைப் பிரகடனம் செய்து, விடுதலைப் புலிகளுடன் நேரடியாகப் பேச்சுவார்த்தையை ஆரம்பிக்க வேண்டும். இதுவே தமிழ் மக்களுடைய ஏகோபித்ததும், ஏகமனதானதுமான கோரிக்கை என்பதை வலியுறுத்தவே — மக்கள் எண்ணத்தை வெளிக்காட்டிப் பிரதிபலிக்கவே — வெள்ளைக்கொடித்தினம் அனுஷ்டிக்கப்படுகிறது.

வெள்ளைக் கொடித்தினம் ஓர் அகிம்சைப் போராட்டம். அதுவும் எவருக்கும் பாதிப்பு ஏற்படுத்தாத அகிம்சைப் போராட்டம்.

வெள்ளைக்கொடித் தினம் கடை அடைப்பு அல்ல. ஹர்த்தால் அல்ல. பாடசாலைகள், போக்குவரத்து, வர்த்தக நிறுவனங்கள் ஆகிய எல்லாம் வழமைபோல நடக்கும். மக்களின் அன்றாட வாழ்க்கை எந்த விதத்திலும் பாதிக்கப்படாமல் இருக்கும் மக்கள் சமாதானத்தையே விரும்புகிறார்கள் என்பதை எடுத்துக்காட்ட, வடக்கு, கிழக்கில் திரும்பிய இடமெல்லாம், வாகனங்களில் எல்லாம் வெள்ளைக்கொடிகள் பறக்க விடப்படுவதே இந்த இயக்கமாகும்.

இது எவருக்கும் பிரச்சினை தராத, குழப்பத்தை ஏற்படுத்தாத, பாதிப்பு உண்டுபண்ணாத தனித்துவமான இயக்கமாகும்— சாதனையாகும்.

நாளை பறக்கும் வெள்ளைக் கொடிகளையும், மக்கள் அணியும் வெள்ளைப்பட்டிகளையும் மதிப்பிட்டு தமிழ் மக்கள் சமாதானத்தின் பக்கம் எந்த அளவுக்கு நிற்கிறார்கள் என்பதை இங்குள்ள அமைதிப்படையினர் கனம் பார்க்கலாம். அதனை இந்திய அரசுக்கு எடுத்துச் சொல்ல வேண்டும். அப்போதுதான் தமிழ் மக்களின் உணர்வுகளை இந்திய அரசால் புரிந்து கொள்ள இலகுவாக இருக்கும்.

தமிழ் பேசும் மக்களின் பாதுகாப்பு, உரிமைகள் என்பன சம்பந்தமான சில அடிப்படை விவகாரங்கள் குறித்துப் பேசிய பின்னர், ஆயுதங்களை ஒப்படைக்கவும், இலங்கை-இந்திய ஒப்பந்தத்தை அமுல்செய்ய ஆதரவு வழங்கவும் தமிழீழ விடுதலைப் புலிகளும் தயார்.

இதனைத் திரு. சிவஞானம், அமைதிப் படையின் பிரதம தளபதி லெப்டினன்ட் ஜெனரல் ஏ. என் கல்கத்துக்கு எழுதிய கடிதத்தில் தெளிவுபடுத்தியிருக்கிறார்.

ஆகவே, பிணக்கை நீட்டிக்கொண்டு — நீடித்துக் கொண்டு — போகாமல் இந்திய அரசு உடன் நடவடிக்கை எடுக்க வேண்டும் எனத் தமிழ் பேசும் மக்கள் சார்பில் கேட்டுக் கொள்கிறோம்.

திரு. சிவஞானம் தமது கடிதத்தில் வலியுறுத்தி இருப்பதுபோல, அமைதிப்படை அதிகாரிகளும் இந்திய வெளிவிவகார அமைச்சு அதிகாரிகளும் கூட்டாக உடனடியாகச் செயற்பட்டால் எல்லாம் நல்லதாக முடியும் என நம்பலாம்.

# ஆப்கனில் மீண்டும் கடும் சண்டை;
# சோவியத் துருப்புக்களின் வாபஸ்
## தாமதமாகலாம் என்று அறிவிப்பு

காபூல், ஜூன் 13

ஆப்கனிஸ்தானில் அரசுப்படைகளுக்கும் கிளர்ச்சிக்காரர்களுக்கும் இடையே கடும் சண்டை மூண்டிருப்பதாக அறிவிக்கப்படுகிறது.

காபூல் வானொலி, சோவியத்தின் 'டாஸ்' செய்தி ஸ்தாபனம் ஆகியன வெளியிட்ட அறிக்கையை ஆதாரங்காட்டி இம்மோதல்களில் 20 கெரில்லாக்கள் உயிரிழந்தனர் என்று அறிவிக்கப்பட்டது.

இம்மோதல்கள் கடந்த பத்து தினங்களுக்கு மேலாகத் தொடர்ந்து இடம்பெற்று வருவதாகவும்,

இதுவரை அரசுத் துருப்புக்கள் 80 பேர் வரை உயிரிழந்தனர் என்றும் கிளர்ச்சிக்காரர்கள் தரப்பு வட்டாரங்கள் தெரிவித்தன.

ஆப்கன் அரசுப்படைகள் நடத்திய விமானத் தாக்குதலில்தான் 19 கிளர்ச்சிக்காரர் உயிரிழந்தனர் என்றும் அவ்வட்டாரங்கள் தெரிவித்தன.

இதனிடையில் கெரில்லாக்களிடையேகோஷ்டி மோதலும் ஏற்பட்டிருப்பதாகவும் செய்திகள் வெளிவந்துள்ளன.

இத்தகவலை காபூல் வானொலியும் டாஸ் செய்தி ஸ்தாபனமும் வெளியிட்டன.

இச்சம்பவங்களினால் சோவியத் துருப்புக்கள் ஆப்கனில் இருந்து வெளியேறுவது தாமதப்படலாம் என்று பி. பி. சி. வானொலியில் ராஜகந்திரச் செய்தியாளர் அறிவித்தார். (எ)

# பிரெஞ்சு நாடாளுமன்றத்தேர்தலில்
## எந்தக் கட்சிக்கும் பெரும்பான்மை இல்லை!

பிரெஞ்சு நாடாளுமன்றத் தேர்தலில் ஜனாதிபதி மித்தரண்ட்டின் சோஷலிசக் கட்சி அறுதிப் பெரும்பான்மையைப் பெறத் தவறிவிட்டது.

கடந்த முப்பதாண்டு காலத்தில் ஜனாதிபதி தலைமையிலான கட்சி ஒன்றுக்கு மக்கள் நாடாளுமன்றத்தில் அறுதிப் பெரும்பான்மைப் பலத்தை வழங்கத் தவறியது இதுவே முதல் தடவை என்று தெரிவிக்கப்படுகிறது.

கடந்த ஞாயிற்றுக்கிழமை நடந்த தேர்தலில் ஜனாதிபதி மித்தரண்டின் சோஷலிசக் கட்சிக்கும் மத்திய வலதுசாரிக் கட்சிக்கும் சம அளவு ஆசனங்கள் கிடைத்தன என்று பிந்திய தகவல்கள் தெரிவித்தன.

கம்யூனிஸ்ட் கட்சி 27 ஆசனங்களைப் பெற்றது. தீவிர வலதுசாரிக்கட்சி ஒரு ஆசனமே கிடைத்தது.

மிதவாத அல்லது மத்திய வலதுசாரிக்கட்சிகளின் ஆதரவுடன் அரசாங்கம் ஒன்றை அமைக்க சோஷலிசக் கட்சி முயற்சித்து வருகின்றதாக அறிவிக்கப்படுகிறது. (எ)

## வெளி உலகில்

# அமெரிக்காவில் கடும் வரட்சி;
# குடிதண்ணீருக்குத் தட்டுப்பாடு
## நூற்றுண்டிலேயே மோசமானது என அறிவிப்பு

வாஷிங்டன் ஜூன் 13

இந்த நூற்றுண்டிலேயே மிகமோசமான வரட்சியால் அமெரிக்கா பாதிக்கப்பட்டிருப்பதாக அறிவிக்கப்பட்டது.

அமெரிக்காவின் மத்திய, தென்கிழக்கு, மத்திய மேற்குப் பகுதி மாநிலங்களே வரட்சியினால் கடுமையான பாதிப்புக்கு இலக்காகியிருப்பதாக அறிவிக்கப்படுகிறது.

டென்னெஸி மாநிலத்தின் ஏரியின் நீர்மட்டம் 40 அடி குறைந்து உள்ளது.

இதன் காரணமாக இந்தியானு அகை ஒட்டியிருக்கின்ற பெரிய நகரங்களில் குடிதண்ணீர் விநியோகத்தில் கட்டுப்பாடு கொண்டுவரப்பட்டுள்ளது.

குழாய் நீரில் கார்கள் கழுவுவது, புற்றரைகளுக்குத்தண்ணீர் விடுவதுபோன்ற நடவடிக்கைகள் தடைசெய்யப்பட்டுள்ளன.

வரட்சி நீங்கக்கூடிய அளவுக்கு மழை பெய்யும் சாத்தியக்கூறுகள் தென்படவில்லை என்று வானிலை அவதான நிலையம் அறிவித்துள்ளது. [எ]

# மார்கோஸின் வங்கிப் பணத்தை
# மணிலாவுக்குத் திருப்பி அனுப்ப
## சுவிஸ் நீதிமன்றம் உத்தரவு!

பேர்ன், ஜூன் 13

சுவிஸ் வங்கியில் பிலிப்பீன்ஸின் முன்னுள் அதிபர் பெர்டினன்ட் மார்கோஸ் வைத்து இருக்கும் பணத்தின் ஒருபகுதியான ஒரு கோடி 50 லட்சம் டாலரை பிலிப்பீன்ஸுக்குத் திருப்பி அனுப்பும்படி சுவிஸ் நீதிமன்றம் உத்தரவிட்டது.

ஜனாதிபதியாக 20 ஆண்டுகள் பணியாற்றிய சமயம் திரு மார்கோஸ் திரட்டி சுவிஸ் வங்கிகளில் வைத்திருப்பதாகக் கூறப்படும் நூறு கோடி டாலர் பணத்தின் ஒருபகுதியே இந்தப் பதினைந்து கோடி டாலர் என்று கருதப்படுகிறது.

சுவிஸ் வங்கியில் மார்கோஸ் வைத்திருக்கும் பணம், பிலிப்பீன்ஸின் அதிகாரத்தைத் துஷ்பிரயோகம் செய்து சட்டவிரோதமாகத் திரட்டப்பட்டது என்றும்,

ஆகவே அப்பணம் மணிலா அரசுக்குத் திருப்பி வழங்கப்பட வேண்டும் என்றும் பிலிப்பீன்ஸ் அரசின் சார்பில் சுவிஸ் நீதிமன்றத்தில் தொடரப்பட்ட வழக்கு முடிவில் இத்தீர்ப்பு வழங்கப்பட்டது எனபது குறிப்பிடத்தக்கது.

பிலிப்பீன்ஸ் ஜனாதிபதி திருமதி கொரஸோன் அக்யூனே அடுத்தவாரம் சுவிட்சர்லாந்துக்கு விஜயம் செய்ய இருப்பது குறிப்பிடத்தக்கது. [எ]

# ராஜீவின் எதிர்காலத்தை
# நிர்ணயிக்கப்போகும்
## அலஹாபாத் இடைத்தேர்தல்!

புதுடில்லி, ஜூன் 13

இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்தியின் அரசியல் எதிர்காலத்தை நிர்ணயிக்கப் போவதாகக் கூறப்படும் அலஹாபாத் நடாளுமன்றத் தொகுதியின் இடைத்தேர்தல் இம்மாதம் 16 ஆம் திகதி நடைபெறவிருக்கின்றது.

இன்னும் மூன்று தினங்களே இருக்கும் இக்கட்டத்தில் அலஹாபாத்தில் தேர்தல் பிரசாரம் உச்சக்கட்டத்தை அடைந்திருப்பதாகச் செய்திகள் தெரிவிக்கப்படுகிறது.

இந்திரா காங்கிரஸ் சார்பில் முன்னுள் பிரதமர் லால்பகதூர் சாஸ்திரியின் புதல்வர் சுனில் சாஸ்திரி போட்டியிடுகின்றார்.

எதிர்க்கட்சிகளின் பொது வேட்பாளராக முன்னுள் நிதி — பாதுகாப்பு அமைச்சர் வி. பி. சிங் போட்டியிடுகிறார்.

இடைத்தேர்தலில் போட்டியிடும் ஏனைய 52 வேட்பாளர்களில் திரு. கஷின்ராம் முக்கியமானவர். வட இந்தியாவில் ஹரிஜன மக்களுக்கு என்று தனிக்கட்சி நடத்தி வருபவர் இவர். இந்திய உளவு ஸ்தாபனமான 'ரோ'வில் உயர் அதிகாரியாக இவர் முன்னர் பணியாற்றினார்.

ஹரிஜன மக்கள் மத்தியில் செல்வாக்குப் பெற்றுள்ள இவர் அலஹாபாத்தில் வெற்றியீட்டுவது கஷ்டம் என்றால் காங்கிரஸ் வேட்பாளர் அல்லது திரு. வி பி சிங்கின் வெற்றி தோல்வியை நிர்ணயிக்கப்போவது இவர் ஹரிஜன மக்களிடம் பெறப்போகும் வாக்குகளில்தான் தங்கியுள்ளது என்று அரசியல் அவதானிகள் கூறுகின்றனர்.

அலஹாபாத் தொகுதியில் உள்ள வாக்காளரில் 24 சதவீதத்தினர் ஹரிஜனர்கள்.

பிரதமர் காந்தியுடன் கருத்து வேறுபாடு கொண்டு விலகிய பின்னர் திரு. வி பி சிங் எதிர்நோக்கும் முதலாவது தேர்தல் இதுவாகும்.

காந்தியின் அமைச்சரவையில் உறுப்பினராக இருந்தபோது இவர் தெரிவு செய்யப்பட்ட எம்.பி யாக லோகசபையில் இருக்கவில்லை: நியமிக்கப்பட்ட எம். பி, யாகவே ராஜ்ய சபாவில் இருந்தார்.

போட்டியிடும்54 வேட்பாளரில் ஒருவர் தமிழர். அவர் பெயர் வீரப்பக் கவுண்டர், (எ)

### அரசடி விநாயகர் வருடாந்த உற்சவம்

யாழ்ப்பாணம், ஜூன் 14

கோண்டாவில் கிழக்கு ஆசிமட அரசடிவிநாயகர் ஆலய வருடாந்த உற்சவம் ஆரம்பமாக உள்ளது.

21 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலை9 00 மணிக்குதேர்த்திருவிழாவும், 22 ஆம் திகதிபுதன் கிழமை காலை 9 00மணிக்கு தீர்த்தோற்சவமும் நடைபெறவுள்ளன.

உற்சவ காலங்களில் தினமும்இரவுத்திருவிழா மாலை 6 30 மணிக்கு நிறைவு பெறும். (இ-சி)

நாளை புதன்கிழமை

# வெள்ளைப் பட்டி அணிந்து
# பாடசாலை செல்லுங்கள்
## இ.த. ஆ.சங்கம் வேண்டுகோள்

யாழ்ப்பாணம், ஜூன் 14

அதிபர்கள், ஆசிரியர்கள் மாணவர்கள் அனைவரும் நாளைபுதன்கிழமை வெள்ளைப்பட்டிஅணிந்து பாடசாலை செல்ல வேண்டும்.

இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம் இவ்வாறு வேண்டுகோள் விடுத்துள்ளது.

இது தொடர்பாக மேற்படி சங்கத்தின் பொதுச்செயலாளர் திரு. த. மகாசிவம் விடுத்துள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

யுத்த நிறுத்தத்தை மேற்கொண்டு தமிழ்ஈழ விடுதலைப்புலிகளுடன் பேச்சுவார்த்தை நடத்த வேண்டும்.

இதன் மூலம் பிரச்சினைகளுக்கு தீர்வு கண்டு வடக்கு, கிழக்கிலுள்ள மக்கள் சமாதானமாக வாழவழி அமைக்கவேண்டும்,

இதுவே தமிழ் மக்களின் அபிலாஷை என்பதனை உலகுக்கு எடுத்துப் காட்டும் வகையில் அகிம்சை ரீதியில் நடத்தப்படும் இந்த வெள்ளைக் கொடித் தினத்துக்கு சகல பொதுமக்களும் ஆதரவளிக்க வேண்டும்.

இவ்வாறு அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. [இ-க-9]

# கூட்டுறவுச் சங்கங்களில்
# வெள்ளைக்கொடி பறக்கவிடுங்கள்
## சிவமகாராசா வேண்டுகோள்

யாழ்ப்பாணம், ஜூன் 14

யாழ். குடாநாட்டிலுள்ள பல நோக்குக் கூட்டுறவுச்சங்க கட்டடங்கள், கிளை நிலையங்கள், மற்றும் வாகனங்கள் என்பனவற்றில் நாளை வெள்ளைக்கொடி ஏற்றப்படவேண்டும்.

யாழ் தேசிய கூட்டுறவுச் சபைத் தலைவர் திரு. எஸ் சிவமகாராசா இவ்வாறு வேண்டுகோள் விடுத்துள்ளார்.

கூட்டுறவுப் பணியாளர்கள் வெள்ளைப்பட்டிகளை அணிந்து கடமைக்குச் செல்லவேண்டும் என்றும் அவர் கேட்டுள்ளார்.

வடக்கு கிழக்கில் நாளை நடைபெறும் வெள்ளைக் கொடி தினத்துக்கு ஆதரவு தெரிவித்து பல்வேறு சங்கங்களும் ஸ்தாபனங்களும் அறிக்கைகளை வெளியிட்டுள்ளன.

### தமிழீழ மாணவர் அவை

தமிழீழ மாணவர் அவை விடுத்துள்ள அறிக்கையில்

இந்த காலகட்டத்தில் எமக்கு வேண்டியது யுத்த நிறுத்தமே.

இதற்கான முயற்சிகளை யார் மேற்கொண்டாலும் அதற்கு ஒத்துழைப்பு அளிப்போம்.

இதன்படி வெள்ளைக் கொடிதினத்துக்கு மாணவர் சமுதாயம் பூரண ஒத்துழைப்பு வழங்க வேண்டும் என்று கேட்கப்பட்டுள்ளது.

### பிரஜைகள் குழு

பிரஜைகள் குழு ... கொடி தினத்துக்கு ... ளும் தமது பூரண ஆதரவைத் தெரிவிக்கவேண்டும்.

இவ்வாறு வடக்கு, கிழக்கு பிரஜைகள் குழுக்களின் இணைப்புக்குழு கேட்டுள்ளது.

### மினிபஸ் சங்கம்

நாளை மினிபஸ்களிலும், சங்கக் கட்டிடங்களிலும் வெள்ளைக் கொடிகளைப் பறக்கவிட்டு தமது ஆதரவைத் தெரிவிக்குமாறு, வட பிரதேச மினிபஸ் சேவைச் சங்களின் சமாஜம் கேட்டுள்ளது

### இறைச்சிக் கடை வர்த்தகர் சங்கம்

கடைகளிலும் வீடுகளிலும் வெள்ளைக்கொடிகளை பறக்கவிட்டு பூரண ஆதரவைத் தெரிவியுங்கள் ... இறைச்சிக் கடை வர்த்தகர் சங்கமும் இவ்வாறு கேட்டுள்ளது. (க-5-51-160-68)

முல்லை மாவட்ட அபிவிருத்தி குறித்து

# உலக வங்கிக்குழு அதிகாரிகளுடன்
## நடந்த கலந்துரையாடல்

புதுக்குடியிருப்புஜூன்14

சமீபத்தில் உலக வங்கிக் குழுவின் அதிகாரிகள் முல்லைத்தீவுக்கு விஜயம் செய்து கச்சேரி மண்டபத்தில் ஓர் கலந்துரையாடலை நடத்தி மக்களின் குறைகளை நேரடியாகக் கேட்டறிந்தனர்.

கலந்துரையாடலில் உலக வங்கிக் குழுவினர் பிறமாவட்ட அதிகாரிகள், முல்லைத்தீவு அரசாங்க அதிபர் க பொன்னம்பலம், விவசாயிகளின் பிரதிநிதிகள் மீனவர் பிரதிநிதிகள் மக்கள் குழுத் தலைவர்கள், ஆகியோர் பங்குபற்றினர்.

முல்லைத்தீவு மக்களின் குறைபாடுகள் பற்றிப் பரிசிலனை செய்யப்பட்டபோது பின்வரும் விடயங்கள் கருத்துக்கு எடுத்துக் கொள்ளப்பட்டன.

1. மீன்பிடித்துறை முகம் அமைத்தல்.
2. சிறுசிறு நீர்ப்பாசனக் குளங்கள் அமைத்தல், புனரமைப்புச் செய்தல்.
3. பழுதடைந்துள்ள பெருந் தெருக்களைத் திருத்துதல்.
4. மின் விநியோக விஸ்தரிப்பு.
5. மக்களின் புனர்வாழ்வு நடவடிக்கைகள். [இ-94]

## சமய நிகழ்ச்சிகளில்

### பொங்கலுடன் உற்சவம் பூர்த்தி

அராலி, ஜூன் 14

அராலி தெற்கு களவத்துலறவைரவர் ஆலய வருடாந்த அலங்கார உற்சவம் ஆரம்பமாகி நடைபெற்று வருகின்றது;

இன்று செவ்வாய்க்கிழமைவிசேஷ அபிஷேக ஆராதனைகளை தொடர்ந்து பிற்பகல் வருடாந்த பொங்கலுடன் உற்சவம் பூர்த்தியடையும் [இ-12]

## வாசகர் நெஞ்சம்

### வெண்கொடி ஏற்றுவோம்

'சலோம்' எனும் எபிரேயச் சொல்லின் அர்த்தம் நீதியானதும், நிறைவு தருவதுமான அமைதியாகும் அரபு மொழியில் அதே அர்த்தமுடைய சொல்லாக 'சலாம்' எனும் சொல் வழங்கி வருகிறது. பாரத நாட்டின் தேசியக்கொடியில் காணப்படும் 'அசோகச்சக்கரம்' பறைசாற்றுவதும் நீதி, நிறைவுடன் கூடிய அமைதியையே அதாவது மெய்யான சமாதானத்தையே.

மெய்யான சமாதானம் சரணகதி மூலம் கிட்டவே கிட்டாது! மெய்யான சமாதானம் ஏற்பட வேண்டுமேல் முதலில் போர் நிறுத்தமும் தொடர்ந்து பேச்சுவார்த்தையும் தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்கத்துக்கும், இந்தியத் தரப்பினருக்கும் இடையே ஏற்பட வேண்டும்.

மெய்யான சமாதானத்தை விரும்பாதவர்கள் தமிழ் மக்கள் மத்தியில் எவரும் இருக்கமாட்டார்கள்! மெய்யான சமாதானத்தின் மீது தமக்குள்ள வாஞ்சையை ஏகோபித்து வெளிப்படையாகப் புலப்படுத்தும் மார்க்கம் எதையும் யாராவது ஒருவர் முன்னெடுக்க வேண்டுமென முழுச் சமுதாயமும் காத்திருந்த பலன் வீண்போகவில்லை.

எதிர்வரும் புதன்கிழமை மெய் சமாதானத்தை போர்நிறுத்தம், பேச்சுவார்த்தை வாயிலாக முன்னெடுக்கக் கோரி தமிழ் மக்கள் கடைகள், கட்டிடங்கள், வாகனங்களில் வெண்கொடிகளைப் பறக்கவிட்டு, வெண்பட்டிகளை உடையில் தரிக்க வேண்டுமென்று யாழ்ப்பாண மாநகர ஆணையாளர் திரு சி.வி.கே சிவஞானம் வேண்டுகோள் விடுத்துள்ளார்,

குடிமக்கள் குழு, வர்த்தக சங்கம், ஆசிரியர், மாணவர் குழாம் ஒத்துழைப்பு நல்க முன்வந்திருப்பது பொது நிறுவனங்களின் மனப்போக்குக்கு சான்றான மாதிரி முன்மாதிரியாகும்.

உரும்பராய் — ஆனந்தன்

### சுன்னுகத்தில் கற்பகம்

பனை அபிவிருத்திச் சபையினர் நாளை 15ஆம் திகதி பனம் பொருள் விற்பனை நிலையமான 'கற்பகம்' கடையை சுன்னுகத்தில் திறந்து வைக்கிறார்கள்.

சுன்னுகம் நவீனசந்தை கட்டடத்தில் புதிய 'கற்பகம்' விற்பனை நிலையம் திறந்து வைக்கப்படுகிறது. (இ-27)

### முல்லைத்தீவில் கசிப்புத் தொல்லை

முல்லைத்தீவு, ஜூன் 14

முல்லைத்தீவு பட்டண எல்லைக்குள் கசிப்பு வியாபாரிகள் அதிகரித்துள்ளதால் தமது வியாபாரம் நஷ்டமடைவதாக முல்லைத்தீவு தென்கு பனம் பொருள் உற்பத்திக் கூட்டுறவுச் சங்கம் கவலை தெரிவிக்கின்றது

[இ-92]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**A/L 89** விஞ்ஞான மாணவர்கட்கு
வெப்ப இரசாயனம்
ஆரம்பம்: 18 06 1988
பிரிவு I Sat, Sun 10-30 a.m.
பிரிவு II ஆரம்பம்: 19-06-1988
Sat, Sun: 1-50 - p.m.
3ஆம் குறுக்குத் தெரு, யாழ்ப்பாணம்.

# உதயன்

14- 06 - 1988 செவ்வாய்க்கிழமை

**A/L 89** வெப்ப இரசாயனம்
பிரிவு 111 ஆரம்பம்: 19-06-1988
Sat, Sun : 4-00 p.m.
ஆசிரியர்:
திரு. நாகரெட்ணம் (B sc.)
மணல்தரை லேன், கந்தர்மடம்-

## வெள்ளைக் கொடிக்கு ஆதரவு

சாவகச்சேரி, ஜூன், 14 யுத்த நிறுத்தம், பேச்சுவார்த்தை, சமாதானம் என்பவற்றை வற்புறுத்தி யாழ். மாநகர ஆணையாளர் திரு. சி. வீ. கே. சிவஞானத்தால் வடக்கு, கிழக்கு வாழ் தமிழ் பேசும் மக்களுக்கு விடுக்கப்பட்ட வேண்டுகோளுக்கு பூரண ஒத்துழைப்பு அளிப்பதெனத் தென்மராட்சி பிரசைகள் குழு தீர்மானித்துள்ளது. (ஒ)

## ஹோம் பிறுன்ஸ்

யாழ்-கிளை வைப்பாளர் சங்கம்

அவசர விசேட பொதுக் கூட்டம்

இடம்: வைத்தீஸ்வரவித்தியாலயம், யாழ்ப்பாணம்
காலம்: ஞாயிற்றுக்கிழமை [19-6-88] காலை 10 மணி
விடயம்: மத்திய வங்கி, நீதிமன்றத்தில் கொடுத்த பெட்டிசத்தைப் பரிசீலித்து மேற்கொண்டு எடுக்கவேண்டிய நடவடிக்கைகளும் வேறு விடயங்களும்

சகல வைப்பாளர்களையும் சமூகமளிக்கும்படி வேண்டுகிறேன்.

14-6-88 ஆ. பாலகிருஷ்ணன் செயலாளர்.

(4286)

## லிபியாவில் வேலை வாய்ப்பு

| | சம்பளம் |
|---|---|
| Ray Welders | - ரு 7, 000 00 |
| Ray வெல்டிங் சுப்பவைசர் | - ரு 10, 000.00 |
| Steel Fabricating சுப்பவைசர் [பைப்ஸ்] | - ரு 10, 000.00 |

சம்பளம் அனுபவத்திற்கு ஏற்ப கணிக்கப்படும். வெளிநாடு போய் வந்தவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும் மூன்று கிழமைக்குள் போகலாம். ஒருகிழமைக்குள் விசாவுக்கு அனுப்பவேண்டி இருப்பதால், பாஸ்போட்டுடன் 3 படம், சான்றிதழ்களுடன் உடன் நேரில் வரவும்.

ந. பாஸ்கரன்

# இந்திராணிஏஜென்ஸி

(சேவிஸ் ஸ்ரேசன் முன்பாக)

நெல்லியடி

Licence No: 616 (4276)

1983 முதல் 1988 மே வரை

# வன்செயலால் பாதிப்புற்றோருக்கு

# 2 கோடியே 85 லட்சம் ரூபா உதவி

## புனர்வாழ்வு அமைச்சு வழங்கியது

கொழும்பு, ஜூன் 14 1983 தொடக்கம் 1988 மே மாதம் வரையான காலத்தில் வன்செயல்கள் காரணமாக உயிரிழந்தவர்களின் குடும்பங்களுக்கும் காயமடைந்தவர்களுக்கும் புனர்வாழ்வு, புனருத்தாரண அமைச்சு இரண்டுகோடியே 85லட்சம் ரூபாவை உதவிப் பணமாக வழங்கியிருக்கிறது.

சென்ற மேமாதம் மட்டும் 36 லட்சம் ரூபா பாதிக்கப்பட்டவர்களுக்கு உதவிப் பணமாக வழங்கப்பட்டது.

அமைச்சு தற்போது அமுல்நடத்தும் நிதி உதவித்திட்டம், அரசு கூட்டுத்தாபன ஊழியர்தவிர்ந்த ஏனையோருக்காகவே தயாரிக்கப்பட்டதுஎன்று அமைச்சின் உதவிச் செயலாளர் திலக் சந்திரசேகரா தெரிவித்தார்.

இந்த உதவித் திட்டத்தின் கீழ் உதவி வழங்குவதை விரைவுபடுத்தும்படி அமைச்சர் லயனல் ஜெயத்திலக்க தனது செயலாளர் ஜயதிஸ்ஸ பண்டாரகொடவுக்கு உத்தரவிட்டிருக்கிறார்.

சென்றமேமாதம் ஆரம்பிக்கப்பட்ட விசேட திட்டத்தினைச் செயற்படுத்த சிறப்பு அதிகாரிகள் குழு ஒன்று பணியாற்றிவருகிறது.

இதனிடையில் உதவி கோரும் புதிய விண்ணப்பங்களை ஏற்கவும் அமைச்சு நடவடிக்கை எடுத்து வருகிறது.

புதிய விண்ணப்பங்களைப் பரிசீலனை செய்து உதவி வழங்குவதை விரைவுபடுத்த அரச அதிபர்கள், உதவி அரச அதிபர்களின் உதவியை நாடவும் அமைச்சு தீர்மானித்துள்ளது என்று அமைச்சு உதவிச் செயலாளர் சொன்னார். (ஒ-எ)

## ஆதீனத்தில் சங்கீத கதாப்பிரசங்கம்

யாழ்ப்பாணம், ஜூன், 14 நல்லை ஆதீனத்தில் வெள்ளிக்கிழமைதோறும் பிற்பகல் 5 மணி தொடக்கம் 6-30 மணிவரை கவிஞர் திரு. நாக. பரமசாமிசிவனருட்செல்வர் என்ற பொருள் பற்றி சங்கீத கதாப்பிரசங்கம் நிகழ்த்துவார். (அ)

## ஆபாச...

[1ஆம் பக்க தொடர்ச்சி] கள் உள்ளூராட்சி நிறுவனங்களால் தடைசெய்யப்படவேண்டும்.

★ மினிசினிமாக்களை தடைசெய்தவர்கள் இத்தொழிலைய நம்பியிருப்பவர்களின் எதிர்கால நிலையை கருத்தில் கொண்டு மினிசினிமாக்களை இயக்க அனுமதிக்க வேண்டும்.

யாழ் மாவட்ட மினி சினிமா உரிமையாளர் சங்கத்தினர் இன்று மாநகர ஆணையாளர் திரு. சி. வி. கே. சிவஞானத்திடம் மகஜர் ஒன்றை கையளிக்கவுள்ளனர்.

இதனிடையில் யாழ். குடாநாட்டில் மினிசினிமாக்கள் இயங்குவதற்கு தமிழீழ விடுதலைப்புலிகள் அண்மையில் தடைவிதித்திருந்தனர் என்பது தெரிந்ததே. (ஒ-5)

## மக்கள் விருப்பத்தை வெளிப்...

[1ஆம் பக்க தொடர்ச்சி] திப்படுத்தவேண்டும் என்பதுதான் இபபோது பாக்கியாக உள்ளது என்று எனக்குத் தெரிகிறது.

### விடுதலைப் புலிகள் தயார்

தமிழ்பேசும் மக்களின் பாதுகாப்பு, உரிமைகள் குறித்த சில அடிப்படை விஷயங்கள் குறித்துப் பேச்சுக்கள் நடத்திய பின்னர் ஆயுதங்களைக் கையளிக்கவும், இந்திய-இலங்கை ஒப்பந்தத்தை ஆதரிக்கவும் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம் தயாராக இருக்கிறார்கள் என்பதை நான் தங்களுக்குத் தெளிவாகத் தெரிவித்துவிட்டேன்.

தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கமும இவற்றை உறுதிப்படுத்தி இருக்கின்றது

யுத்த நிறுத்தம், பேச்சுவார்த்தை ஆகியன பற்றிய எனது வேண்டுகோள் தமிழ்பேசும் மக்கள் சார்பாகவே நான் விடுத்திருக்கின்றேன் என்பதைத் திட்டவட்டமாக நான் தெரிவித்தேன் என்பது தங்களுக்கு நினைவில் இருக்கும்.

மக்களின் இந்த ஏகோபித்த விருப்பத்தை வெளிப்படையாகக் காட்டவே இம்மாதம் 15ஆம் திகதியை 'வெள்ளைக் கொடி'த் தினமாக அனுஷ்டிக்கத் தீர்மானிக்கப்பட்டிருக்கிறது.

இது கடையடைப்பு அல்ல; ஹர்த்தாலும் அல்ல.

ஆனால் அன்றையதினத்தில பின்வரும் விஷயங்கள் இடம்பெறும்;

1. வடக்கு, கிழக்கில் சைக்கிள் உட்படச் சகல வாகனங்களிலும் வெள்ளைக் கொடி பறக்கவிடப்படும்.

2 வர்த்தக நிலையங்கள், வீடுகள் மற்றும் ஸ்தாபனங்களிலும்வெள்ளைக் கொடிகள பறக்கவிடப்படும்

3 மாணவர் உட்படச் சகலரும் வெள்ளைப்பட்டி அணிவர்

யுத்த நிறுத்தம் ஏற்பட்டு, பேச்சுவார்த்தைகள் நடைபெற்று, தீவில் அமைதி உடனடியாகத் திரும்பவேண்டும் என்ற தமிழ்பேசும் மக்களின் விருப்பத்தை இந்த நடவடிக்கை சந்தேகமின்றி வெளிப்படுத்தும்.

எனது இனத்தின் இந்த அமைதி நடவடிக்கையை உங்களுக்கு அறிவித்து வைக்க விரும்புகின்றேன்

ஆகவே நேரடியாகவும் வெளிப்படையாகவும் தமிழீழ விடுதலைப் புலிகளுடன்பேச்சுவார்த்தை நடத்தும்படி இந்தியத் தரப்பினரைக் கோருகின்றேன்.

—இப்படிக் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டிருக்கின்றது (அ-உ-எ)

## அந்தியேட்டியும் நினைவஞ்சலியும்



இரவிந்திரராஜா மாணிக்கம்
(அருள் மாஸ்ரர்)

ஆண்டவன் படைப்பு: 13-4-1962
ஆள்பவன் அழிப்பு: 4-1-1988

தமிழீழம் மீட்கப் புறப்பட்ட இளம் வீரர்களுக்கு வழிகாட்டியாயிருந்து வீர சாகசம் புரிந்து தமிழீழ மண்ணுக்கு உன்னையே உரமாக்கிய உன் தியாகத்தைப் போற்றும் அதேவேளை உன் பாசத்தால் பரிதவிக்கின்றோம்.

உமது இலட்சியம் இனிது நிறைவேற இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

உன் அன்புள்ள
அம்மா, சகோதரர்கள், சகோதரிகள், மைத்துனர், மைத்துனிமார், மற்றும் உறவினர்கள், நண்பர்கள்

யாழ்ப்பாணம் (4445)

## அந்தியேட்டி அழைப்பிதழ்

கந்தசாமி யோகாம்பிகை

மண்ணில் 12-4-1918 — விண்ணில் 28-4 1988

வல்வெட்டித்துறையைச் சேர்ந்த கந்தசாமி யோகாம்பிகை அவர்கள் 28-04-88 அன்று காலமானார். அன்னாரின் அந்தியேட்டி ஈமக் கிரியைகள் 15-06-88 அன்று புதன்கிழமை காலை 6 00 மணிக்கு ஊறணி மடத்தில் செய்யப்படும். பின் மதியபோசனம் தொண்டைமனாற்றிலுள்ள அன்னாரின் மகளின் இல்லத்தில் நடைபெறும். அன்னாரின் துக்க செய்தி கேட்டு நேரில் வந்தும், அனுதாபம் தெரிவித்த உற்றார், உறவினர், நண்பர்கள் ஏனையோரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

இங்ஙனம்,
பிள்ளைகள், மருமக்கள்,
சகோதரர்கள், பேரப்பிள்ளைகள்.

(4446)

## 8-ஆவது ஆண்டு நினைவு தினம்



ஜனனம்: 28 - 01 - 1906
சங்கமம்: 14 - 06 - 1980

**R. A.** சமரக்கோன்

பாங்கான உன் முகம்தனை
'பப்பா' என அழைத்திட்டு
நாலிரண்டு ஆண்டுகள் ஆகுதே
நாவறண்டு போகுதே
எம் ஆவி ஏங்குதே
எம் இதயம் நனையுதே!

பிரிவால் துயருறும்
மனைவி, மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்,
இளவாலை. (4128)

## மரண அறிவித்தல்கள்

### சரஸ்வதி முத்துச்சாமிப்பிள்ளை

சங்கானை அரசடி வைரவகோவிலடியைச் சேர்ந்த திருமதி சரஸ்வதி முத்துச்சாமிப்பிள்ளை ஞாயிறு இரவு காலமானார்.

இவர் பொன்னையா முத்துச்சாமிப்பிள்ளையின் அன்பு மனைவியும் - சச்சிதானந்தம் (சிபபிளெகஸ் சங்கானை), சிவானந்தம் [ஓய்வுபெற்ற கல்வியதிகாரி, வடலியடைப்பு], தில்லைநாதன் [பொறியியலாளர், பொருத்தமான தொழில்நுட்ப சேவைகள், நல்லூர்], சுத்தானந்தம் [பிரான்ஸ்], குணரத்தினம் [மதிப்பீட்டாளர், செட்டியாமடம் அரிசிஆலை, அராலி] ஆகியோரின் அருமைத் தாயாரும் -

சந்திரா, குமாராம்பிகை, கௌரி, ஜெனி, ஜெயலட்சுமி ஆகியோரின் அன்பு மாமியாரும -

பொன்னையா, சிவசோதியின் சகோதரியும் -

சந்திரா, கமலாம்பிகை, கமலாதேவி, உருத்திரகுமாரன் [பிரதேசசபை உப அலுவலகம், மானிப்பாய்], அருட்குமரன் ஆகியோரின் மாமியும் -

திருமாறன், தயாமாறன், கோமதி, கருணைமாறன், தவமாறன், அன்பழகன், கலையழகி, கலையரசி, ஞானவழகன், கலைவாணி, அரவிந்தன், குமரன், ரமணன், குமணன், தேவகி ஆகியோரின் அருமைப் பேத்தியுமாவார்.

அன்னாரது ஈமக்கிரியை இன்று செவ்வாய் காலை 10-00 மணியளவில் "பத்மனகம்" சங்கானையில் நடைபெறும். உறவினர்களும், நண்பர்களும் தயவுடன் இவ்வறிவித்தலை ஏற்றுக்கொள்ளவும்.

C 5459 தகவல்: சச்சிதானந்தம்.

### திருமதி பத்மாவதி கந்தையா

சுழிபுரத்தைச் சேர்ந்த காலஞ்சென்ற மனாயன் பெலசனர் திரு. நா. கந்தையாவின் அன்பு மனைவி பத்மாவதி 12-6-88ஆம் திகதி காலமானார். அன்னார் திருமதி பா. கனகாம்பிகை, திரு. க. சிவப்பிரகாசம் [கணக்காளர், AUSTRIA], திரு. க. சிவானந்தன் [பொறியியலாளர், U. K.], திரு. க. சிவகுருநாதன் [பரிசோதகர், கட்டடத் திணைக்களம், யாழ்ப்பாணம்], திருமதி க. ஞானம்பிகை [CANADA], திருமதி பா. யோகாம்பிகை [U. K] ஆகியோரின் அருமைத் தாயாரும், திரு. த. பாலசுப்பிரமணியம் [FORUT], திருமதி Dr. சி. குஞ்சிதலீலாவதி [AUSTRIA], திருமதி சி. ரஞ்சினி [கணக்காளர், U. K ], திருமதி சி சத்தியபாமா, திரு. சுந்தரேஸ்வரன் [பொறியியலாளர், CANADA], திரு. Dr. பாலகுமார் [U. K ] ஆகியோரின் அன்பு மாமியாரும், கருணாகரன், பிரபாகரன், ஞானசொரூபி, அபிராமி, ஆனந்தி, மைதிலி, அரவிந்தன், ஜெனகன், ஜெயந்தன், சுதர்சன், சிவகாமி ஆகியோரின் அன்புப் பேத்தியாரும் ஆவார். அன்னாரின் இறுதிச் சடங்குகள் 13-6-88இல் அம்பிகை வாசம், சுழிபுரத்தில் நடைபெற்று, திருவடிநிலை மயானத்தில் தகனஞ்செய்யப்பட்டது. இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

(4281)

## திறன் ஆய்வு நிலையம் நடத்தும்

# 3 ஆவது A/L போட்டிப் பரீட்சை

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 20-6-88 திங் | மு.ப 8.30 | Botany II | பி.ப | 12. 30 | M C. Q. |
| | மு.ப 8 30 | Applied I | பி.ப | 12. 30 | Applied II |
| 21-6-88 செவ் | மு.ப 8 30 | Physics II | பி.ப | 12.30 | Physics I |
| 22-6-88 புதன் | மு.ப 8.30 | Zoology II | பி.ப | 12.30 | Zoology I |
| | மு.ப 8 30 | Pure I | பி.ப | 12 30 | Pure II |
| 30-6-88 வியா | மு ப 8 30 | Chemistry II | பி.ப | 12.30 | Chemistry I |

பரிசு வழங்கும் திகதி 6-7-88 புதன் 2. 30 p.m

ஒவ்வொரு பாடத்திலும் 1ஆம் இடம் 300+சுழல் பரிசு
" " 2ஆம் " 200+சான்றிதழ்
" " 3ஆம் " 100+சான்றிதழ்
" " 25 மாணவர்களுக்கு சான்றிதழ்கள்
4 பாடத்தில் 1ஆவது (கணிதம்) பரிசு 500 +P S கேடயம்
4 " 1ஆவது [உயிரியல்] " 500+பத்மா கேடயம்

A/L 87 பரீட்சையின் பரிசில்களும் 6-7-88 மாலை வழங்கப்படும்.

நிலையங்கள் அமையும் இடங்கள்.

உடுப்பிட்டி: வெக்டர் கணித நிலையம் (வேலாயுத பவனம்)
நெல்லியடி: கிளாஸ்கோ கல்வி நிலையம் விக்கினேஸ்வர றோட்
: பௌதிக ஆசிரியர் வீக்கு நிலையம்
சுன்னாகம்: வினஸ் கல்வி நிலையம் K. K. S றோட்
தெல்லிப்பளை: காசி விநாயகர் விஞ்ஞான கணித நிலையம்
சாவகச்சேரி: விபரங்கட்கு சிவம் மெடிக்கல் ஸ்ரோர்ஸ் புத்தகசாலை
யாழ்ப்பாணம்: சகல முன்னணி A/L கல்வி நிலையங்கள்

● புதிய விண்ணப்பங்கள் பரீட்சையின் முதல் நாள் மேற்படி நிலையங்களில்நேரடியாக விண்ணப்பித்து பரீட்சை எழுதலாம்.

[C-5448]

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிக்கேஷன்ஸ் [பிறைவேற்] லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் நாவலர் வீதி, 292/2, இலக்கத்தில் உள்ள அவர்களது அச்சகத்தில் 14-06-1988 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது. Printed and published by New Uthayan Publications (Pvt) Ltd., 292/2, Navalar Road, Jaffna on Tuesday, 14 th June 1988.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org